بسم اللہ الرحمن الرحیم نحمدہ ونصلی علی رسولہ الکریم وعلی عبدہ المسیح الموعود
وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّأَنْتُمْ أَذِلَّةٌ

தொகுதி 6 | இதழ் 23

வருடாந்திர சந்தா ரூபாய் 575/-

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian TAMIL

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

28 ஷவ்வால் 1442 ஹிஜ்ரி கமரி 10 இஹ்ஸான் 400 ஹிஜ்ரி ஷம்ஸி தப்லீக் 10 ஜூன் 2021

## அல்லாஹ்வின் கட்டளை

يَّهْدِيْ بِهِ اللّٰهُ مَنِ اتَّبَعَ رِضْوَانَهٗ سُبُلَ السَّلٰمِ
وَيُخْرِجُهُمْ مِّنَ الظُّلُمٰتِ اِلَى النُّوْرِ بِاِذْنِهٖ
وَيَهْدِيْهِمْ اِلٰى صِرَاطٍ مُّسْتَقِيْمٍ

அவனது விருப்பத்தைத் தேடுகின்றவர்களை அல்லாஹ் இதன் மூலம் சமாதான வழிகளில் நடத்துகின்றான். மேலும் அவன் தனது கட்டளையினால், அவர்களை இருள்களிலிருந்து வெளியேற்றி ஒளியினிடத்துக் கொண்டு வருகின்றான். மேலும் நேரான வழியில் அவர்களைச் செலுத்துகிறான். (5:17)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய–தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி–யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

**இறைவன் அடியார்களை சோதனைக்குள்ளாக்குவது அவனது உரிமையாகும். இந்த சோதனை இறைவன் புறமிருந்து மனிதனின் நன்மைக்காகவே வருகின்றன என்பது உண்மையாகும்**

**என்னைப் பொருத்தவரை உலகத்தின் துக்கம் மற்றும் துயரத்தினால் சிந்தப்படும் கண்ணீர் நெருப்பாகும். அது அவ்வாறு சிந்தக்கூடியவர்களையே எரித்து விடுகின்றது**

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து...

### இறைவனுக்கும் அடியாருக்குமான தொடர்பு

ஒரு நாள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்: இரு நண்பர்களுக்கு மத்தியில் நட்பு எப்போது நிலைபெற முடியும் என்றால் சில சமயம் அவர் இவருடைய கூற்றை கேட்க வேண்டும். சில சமயம் இவர் அவரது கூற்றை கேட்க வேண்டும். ஒருவேளை ஒரு தரப்பு தனது கூற்றே கேட்கப்பட வேண்டும் என்று மறைவாக செயல்படும் என்றால் பின்னர் விவகாரம் சீர்கெட்டு விடும். இதே நிலை தான் இறைவன் மற்றும் அடியாருக்கிடையிலான தொடர்பில் இருக்க வேண்டும். சில சமயம் அல்லாஹ் அடியாரின் கூற்றை கேட்டுக் கொள்கின்றான். அவருக்கு அருளின் வாசல்களை திறக்கின்றான். சில சமயம் அடியார் இறை நியதியில் திருப்தி கொள்ள வேண்டும். இறைவன் அடியார்களை சோதனைக்குள்ளாக்குவது அவனது உரிமையாகும். இந்த சோதனை இறைவன் புறமிருந்து மனிதனின் நன்மைக்காகவே வருகின்றது என்பது உண்மையாகும். அவனது இயற்கைச் சட்டமும் இவ்வாறே அமைந்துள்ளது. அதாவது தேர்வுக்குப் பிறகு எவர் சிறந்தவராக வெளிப்படுவாரோ அவரை தனது அருட்களுக்கு அவன் வாரிசாக்கி விடுகின்றான்.

### உலக விவகாரங்களில் மூழ்கி விடுவது மறுமையின் இழப்பிற்கு காரணியாக அமைகின்றது

ஒரு இளைஞர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சமூகத்தில் ஆஜராகி (தனது) உலக துயரங்களின் கதைகளை கூறத் தொடங்கினார். மேலும் தனது பல தரப்பட்ட துன்பங்களையும், வேதனைகளையும் எடுத்துக் கூறினார். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அவருக்கு மிகவும் புரிய வைத்தார்கள். முழுமையாக இந்த விவகாரங்களில் மூழ்கி இருப்பது மறுமை வாழ்க்கையின் இழப்பிற்கு காரணியாக அமைந்து விடுகின்றது. நம்பிக்கையாளர் இந்த அளவுக்கு அழுது புலம்பக் கூடாது என்றும் கூறினார்கள். கடைசியில் அவர் மிக சப்தமாக அழத் தொடங்கினார். அப்போது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மிகவும் கோபத்தையும், அதிருப்தியையும் வெளிப்படுத்தி நிறுத்துங்கள் என்று கூறினார்கள். மேலும் இவ்வாறு அழுவதை நரகத்தின் காரணியாக நான் பார்க்கின்றேன். என்னைப் பொருத்தவரை உலக துயரம் மற்றும் துன்பத்தினால் சிந்தப்படும் கண்ணீர் நெருப்பாகும். அது (அவ்வாறு கண்ணீர்) சிந்தக்கூடியவர்களையே எரித்து விடுகின்றது. இதுபோன்ற நபர்களின் நிலையைப் பார்த்து எனது உள்ளம் கடுமையாகி விடுகின்றது என்றும் கூறினார்கள்.

### முன்னுதாரணமான முழுமையான நம்பிக்கையின் தன்மை

ஒரு நாள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சபையில் 'தவக்குல்' (முழுமையான நம்பிக்கை) குறித்து பேசப்பட்டது. அப்போது அன்னார் கூறினார்கள்: நான் எனது உள்ளத்தின் விநோதமான நிலையை உணர்கின்றேன். உதாரணமாக, மிகக் கடுமையான வெப்பம் ஏற்பட்டு விடும்போது மக்கள் இனி மழை பொழியும் என உறுதியாக நம்பிக்கை கொள்கின்றனர். அதேபோன்று நான் எனது (பணப்) பெட்டி காலியாக இருப்பதை பார்க்கும்போது தற்போது இது நிறைந்து விடும் என்று எனக்கு இறைவனின் அருளின் மீது உறுதியான நம்பிக்கை ஏற்படுகின்றது. பின்னர் அவ்வாறே நிகழ்ந்து விடுகின்றது.

இறைவன் மீது ஆணையிட்டவாறு அன்னார் (அலை) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: எனது (பணப்) பை காலியாகி விடும்போது இறைவன் மீதான முழுமையான நம்பிக்கையினால் எனக்கு மகிழ்ச்சியும், இன்பமும் ஏற்படுகின்றது. அதன் தன்மைகளை என்னால் எடுத்துரைக்க இயலாது. அந்த நிலை மிகவும் ஆறுதல் வழங்கக்கூடிய நிலையாகவும், நிம்மதியளிக்கக்கூடிய நிலையாகவும் இருக்கின்றது. (பணப்) பை நிறைந்திருப்பதனால் ஏற்படும் நிம்மதியை விட அந்த நிலையில் அதிக நிம்மதி ஏற்படுகிறது.

அன்னார் கூறினார்கள்: உலக வழக்குகளின் காரணமாக தந்தை அவர்களும், சகோதரரும் பல வகையான துன்பங்களிலும், துக்கங்களிலும் மூழ்கி இருந்தார்கள். அவர்கள் சில முறை எனது நிலையைப் பார்த்து ஏக்கம் கொண்டார்கள். மேலும் இவர் மிகவும் நற்பேறு பெற்ற மனிதர் ஆவார். இவரை பொருத்தவரை எந்த துன்பமும் வருவது இல்லை என்று அவர்கள் கூறி வந்தனர்.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 296, 297 – 2018 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**ஹஸ்ரத் இப்னு உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்கள் இஸ்லாத்தை ஒப்புக் கொண்டார்கள். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், اَللّٰهُمَّ اَخْرِجْ مَا فِيْ صَدْرِهٖ مِنْ غِلٍّ وَاَبْدِلْهُ اِيْمَانًا என்று துஆ செய்தவாறு அன்னாரின் நெஞ்சத்தில் மூன்று முறை தடவினார்கள். பொருள்: அல்லாஹ்வே! இவரது நெஞ்சத்திலுள்ள பகைமையை அகற்றி விடுவாயாக. மேலும் அதனை ஈமானைக் கொண்டு மாற்றி விடுவாயாக**

---

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மகத்துவமிக்க கலீஃபா ஹஸ்ரத் உமர் ஃபாரூக் (ரலி) அவர்களின் புகழுக்குரிய பண்புகளைப் பற்றிய நற்குறிப்புகள்**

---

**இந்த துஆக்களையும் அதிகமாக செய்ய வேண்டும்**

رَبِّ كُلُّ شَيْءٍ خَادِمُكَ رَبِّ فَاحْفَظْنِيْ وَانْصُرْنِيْ وَارْحَمْنِيْ اَللّٰهُمَّ اِنَّا نَجْعَلُكَ فِيْ نُحُوْرِهِمْ وَنَعُوْذُبِكَ مِنْ شُرُوْرِهِمْ

---

**இதேபோன்று நான் இந்த விஷயத்தின் பக்கமும் கவனமூட்ட விரும்புகின்றேன். இன்றைய நாட்களில் கொரோனா தொற்று நோய் பரவியுள்ளது. அது முழு உலகையும் தனது கட்டுப்பாட்டில் வைத்துள்ளது. அதிலிருந்து தப்பிப்பதற்கும், அல்லாஹ்வின் கருணையை பெறுவதற்கும் குறிப்பாக அதிகமாக துஆ செய்யுங்கள். அதேபோன்று குறிப்பாக எந்த நாடுகளில் அஹ்மதிய்யத்திற்கு எதிராக எதிர்ப்புகள் அதிகம் இருக்கின்றதோ மேலும் எவர்களின் வாழ்க்கை கஷ்டத்திற்குள்ளாகி உள்ளதோ அவர்களுக்காகவும் அதிகமாக துஆ செய்யுங்கள். அல்லாஹ் அவர்களுக்கு எளிமையை ஏற்படுத்துவானாக**

ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 07 மே 2021** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1400 -ஆம் ஆண்டு **ஹிஜ்ரத்** மாதம் **07 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ -

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ - الرَّحْمٰنِ الرَّحِيْمِ - مٰلِكِ يَوْمِ الدِّيْنِ - اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ -

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ - صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

اَلَّذِيْنَ يُنْفِقُوْنَ أَمْوَالَهُمْ بِاللَّيْلِ وَالنَّهَارِ سِرًّا وَّعَلَانِيَةً فَلَهُمْ أَجْرُهُمْ عِنْدَ رَبِّهِمْ وَلَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُوْنَ

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு நடைபெற்றுக் கொண்டிருந்தது. அன்னார் இஸ்லாத்தை ஒப்புக் கொண்டது தொடர்பாகவும் கூறப்பட்டு வந்தது. ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் இஸ்லாம் ஒப்புக் கொண்டதை பற்றி இவ்வாறு கூறுகின்றார்கள்:

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இஸ்லாத்தை மிகக் கடுமையாக எதிர்த்து வந்தார்கள். அதாவது இஸ்லாத்தை ஒப்புக் கொள்ளும் வரை தொடர்ந்து எதிர்த்துக் கொண்டிருந்தார்கள். ஒரு நாள் அவர்களின் உள்ளத்தில் நாம் ஏன் இந்த மார்க்கத்தின் தோற்றுனரையே தீர்த்து கட்டி விடக்கூடாது? என்ற எண்ணம் தோன்றியது. இந்த எண்ணம் தோன்றியவுடன் உடனேயே அன்னார் (தமது) கரங்களில் வாள் ஏந்தினார்கள். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை கொலை செய்வதற்காக வீட்டிலிருந்து வெளியேறினார்கள். உமரே! எங்கே செல்கின்றீர்கள் என்று வழியில் ஒருவர் கேட்டார். அதற்கு நான் முஹம்மத் (ஸல்) அவர்களை கொலை செய்வதற்காக சென்று கொண்டிருக்கின்றேன் என்று அன்னார் பதிலளித்தார்கள். அந்த நபர் சிரித்துக் கொண்டு, முதலில் உமது வீட்டைப் பற்றி தெரிந்து கொள்ளுங்கள். உமது சகோதரியும், மைத்துனரும் அவர் மீது நம்பிக்கை கொண்டு விட்டனர். அதற்கு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், இது பொய் ஆகும் என்று கூறினார்கள். நீரே சென்று பார்த்துக் கொள்ளும் என்று அந்த நபர் கூறினார்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அங்கு சென்றார்கள். கதவு அடைக்கப்பட்டிருந்தது. வீட்டினுள் ஒரு சஹாபி திருக்குர்ஆன் கற்றுக் கொடுத்துக் கொண்டிருந்தார். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கதவை தட்டினார்கள். வீட்டின் உள்ளே இருந்து யார் அது? என்று அன்னாரின் மைத்துனர் குரல் கொடுத்தார். உமர் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் பதிலளித்தார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) கடுமையான எதிரியாக இருக்கின்றார் என்பதை அவர் அறிந்திருந்தார். எனவே ஹஸ்ரத் உமர் (ரலி) வந்துள்ளார்கள் என்பதை கண்டபோது திருக்குர்ஆன் கற்றுக் கொடுத்துக் கொண்டிருந்த சஹாபியை (வீட்டில்) ஓரிடத்தில் மறைத்து விட்டார்கள்.

அதேபோன்று திருக்குர்ஆனின் பக்கங்களையும் வீட்டின் ஒரு மூலையில் ஒளித்து வைத்து விட்டார்கள். பின்னர் அவர்கள் கதவை திறந்தார்கள். அவர்கள் முஸ்லிமாகி விட்டார்கள் என்ற செய்தியை கேள்விப்பட்டு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் வந்திருந்தார்கள். அதாவது அன்னாரின் மைத்துனரும், சகோதரியும் முஸ்லிமாகி இருந்தனர். எனவே உள்ளே வந்த உடன் கதவைத் திறப்பதில் ஏன் தாமதம் ஏற்பட்டது? என்று கேள்வி எழுப்பினார்கள். அதற்கு அன்னாரின் மைத்துனர் தாமதம் ஏற்படத்தானே செய்யும் என்று பதிலளித்தார்கள். அதற்கு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், இது விஷயமல்ல. ஏதோவொரு குறிப்பான காரணம் கதவைத் திறப்பதில் தடையாக இருந்துள்ளது என்று கூறினார்கள். நீங்கள் அந்த சாபியின் விஷயத்தை கேட்டுக் கொண்டிருந்ததாக எனக்கு சப்தம் வந்து கொண்டிருந்தது. (மக்கத்து இணை வைப்பவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை ஒப்புக் கொண்டவர்களை சாபி என அழைத்து வந்தனர்).

அன்னார்(அதாவது அன்னாரின் மைத்துனர்) மறைப்பதற்கு முயற்சி செய்தார்கள். ஆனால் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு கோபம் வந்தது. தனது மைத்துனரை அடிப்பதற்காக முன்னேறினார்கள். அன்னாரின் சகோதரி தனது கணவரின் மீதான அன்பின் காரணத்தால் இடையில் வந்து விட்டார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அடிப்பதற்கு கையை ஓங்கியிருந்தார்கள். அன்னாரின் சகோதரி திடீரென இடையில் வந்து விட்டதால் தனது கரத்தை தடுக்க முடியாமல் போனது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கரம் மிக வேகமாக அன்னாரின் மூக்கில் அதாவது சகோதரியின் மூக்கில் பட்டு அதன் காரணமாக இரத்தம் வழிந்தது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் உணர்வுப்பூர்வமான மனிதராக இருந்தார்கள். அன்னார்

பெண்ணின் மீது கையை ஓங்கிவிட்டோமே என்பதைக் கண்டார்கள். அது அரபு நாட்டின் வழக்கத்திற்கு எதிரானதாகவும் இருந்தது. அது மட்டுமல்ல சகோதரியின் மீது கையை ஓங்கியிருந்தார்கள். (சகோதரியை அடித்திருந்தார்கள்).

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் விஷயத்தை சுமூகமாக்குவதற்காக, சரி! நீங்கள் என்ன ஓதிக் கொண்டிருந்தீர்கள் என எனக்கு கூறுங்கள் என்று கேட்டார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் மென்மையின் உணர்வுகள் உருவாகி விட்டன என்பதை (அன்னாரின்) சகோதரி புரிந்து கொண்டார்கள். உம்மைப் போன்ற மனிதரின் கரத்தில் அந்தத் தூய்மையான பொருளை கொடுப்பதற்கு நாங்கள் தயாராக இல்லை. நீர் செல்லும் என்று கூறினார்கள். அப்படியென்றால் நான் என்ன செய்வேன்? என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கேட்டார்கள். அதற்கு அதோ முன்னால் தண்ணீர் உள்ளது. சென்று குளித்து விட்டு வாருங்கள். அப்போதுதான் அந்தப் பொருளை உமது கரத்தில் தர முடியும் என்று சகோதரி கூறினார். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் குளித்து விட்டு திரும்பி வந்தார்கள். அவர்கள் ஓதிக் கொண்டிருந்த திருக்குர்ஆனின் பக்கங்களை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கரத்தில் சகோதரி கொடுத்து விட்டார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடத்தில் ஒரு மாற்றம் உருவாகியிருந்தது. எனவே திருக்குர்ஆனை ஓதிய உடனேயே அன்னாரிடத்தில் உருக்கம் ஏற்பட்டு விட்டது. மேலும் அன்னார் அந்த வசனங்களை ஓதி முடித்த பிறகு தன்னையும் அறியாமல்

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا رَّسُوْلُ اللهِ

என்று கூறினார்கள். இந்த சொற்களை கேட்டு விட்டு அந்த சஹாபியும் வெளியே வந்தார்கள். அதாவது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு அஞ்சி மறைந்திருந்த சஹாபியும் வெளியே வந்தார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தற்போது எங்கே இருக்கின்றார்கள்? என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கேட்டார்கள். அந்த நாட்களில் எதிர்ப்பின் காரணமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வீட்டை மாற்றிக் கொண்டிருந்தார்கள். தற்போது தாரே அர்கமில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தங்கியுள்ளார்கள் என்று அந்த சஹாபி கூறினார். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் வாளை ஏந்தியவாறு அந்த வீட்டை நோக்கி புறப்பட்டார்கள். ஒருவேளை இவர் தீய எண்ணத்துடன் செல்கின்றாரோ என்ற சந்தேகம் சகோதரியின் உள்ளத்தில் தோன்றியது. எனவே இறைவன் மீது ஆணையாக! அங்கு சென்று நான் எந்தத் தீங்கையும் ஏற்படுத்த மாட்டேன் என்று நீர் எனக்கு ஆறுதலை தராத வரை இப்போது நான் உம்மை அங்கு செல்ல அனுமதிக்க மாட்டேன் என்று சகோதரி கூறினார். நான் எந்த குழப்பமும் செய்ய மாட்டேன் என்று உறுதியான வாக்குறுதி அளிப்பதாக ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அங்கு சென்றடைந்தார்கள். அதாவது எங்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தங்கியிருந்தார்களோ அங்கு சென்றார்கள். கதவை தட்டினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் ஏனைய சஹாபிகளும் அந்த வீட்டினுள் அமர்ந்திருந்தார்கள். மார்க்க வகுப்பு நடந்து கொண்டிருந்தது. யார் அது? என்று ஒரு சஹாபி கேட்டார். உமர் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் பதிலளித்தார்கள். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! கதவை திறக்க வேண்டாம். இல்லையென்றால் ஏதாவது குழப்பம் ஏற்படும் என்று ஒரு சஹாபி கூறினார். ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்கள் அப்போது தான் ஈமான் கொண்டிருந்தார்கள். மேலும் போர் குணம் கொண்ட நபராக இருந்தார்கள். அன்னார் கதவை திறங்கள். அவர் என்ன செய்கின்றார் என்று நான் பார்க்கின்றேன் என்று கூறினார்கள். எனவே ஒருவர் கதவை திறந்தார். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் உள்ளே வந்தார்கள். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல) அவர்கள், உமரே! நீர் எதுவரை என்னை எதிர்ப்பதில் முன்னேறிக் கொண்டே செல்வீர்? என்று கேட்டார்கள். அதற்கு அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நான் எதிர்ப்பதற்காக வரவில்லை. நான் தங்களின் அடிமையாக ஆகுவதற்கு வந்துள்ளேன் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

எந்த உமர் ஒரு மணி நேரத்திற்கு முன்பு வரை இஸ்லாத்தின் கடுமையாக இருந்தாரோ மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை கொலை செய்வதற்காக வீட்டை விட்டு வெளியேறி இருந்தாரோ அவர் ஒரு நொடிப்பொழுதில் உயர்தரமான நம்பிக்கையாளராக மாறி விட்டார். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மக்காவின் தலைவர்களில் ஒரு தலைவராக இருக்கவில்லை. ஆயினும் வீரத்தின் காரணமாக இளைஞர்களின் மீது அன்னாரின் நல்ல தாக்கம் ஏற்பட்டிருந்தது. அன்னார் முஸ்லிமாகி விட்டபோது சஹாபிகள் உணர்வுப்பூர்வமாக 'நாரே தக்பீர்' என்று தக்பீர் முழக்கமிட்டார்கள். அதன் பிறகு தொழுகைக்கான நேரம் வந்தது. அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தொழ விரும்பினார்கள். எந்த உமர் இரண்டு மணி நேரத்திற்கு முன்பு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை கொலை செய்வதற்காக தமது வீட்டை விட்டு வெளியேறி இருந்தாரோ தற்போது அதே உமர் மீண்டும் வாளை ஏந்தி இவ்வாறு கூறினார்:

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! இறைவனின் தூதரும், அவரை ஒப்புக் கொண்டவர்களும் மறைந்து தொழுகைகளை நிறைவேற்றுகிறார்கள். மற்றொரு பக்கம் மக்கத்து முஷ்ரிகீன்கள் (இணைவைப்பவர்கள்) மிகவும் தைரியத்துடன் வெளியே சுற்றுகிறார்கள். இது எவ்வாறு நடக்க முடியும்? கஃபாவின் வளாகத்தில் தொழுவதிலிருந்து யார் நம்மை தடுக்கின்றார் என்று நான் பார்க்கின்றேன் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள். அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், இந்த உணர்வுகள் மிகவும் நல்ல விஷயமாகும். ஆனால் தற்போது நிலவரம் எப்படி உள்ளதென்றால், இப்போது வெளியே செல்வது சிறந்ததல்ல என்று கூறினார்கள்.

(தஃப்ஸீரே கபீர், தொகுதி 6 பக்கம் 141 – 143)

ஆனால் அதற்குப் பிறகு பின் நாட்களில் தொழுகையும் நிறைவேற்றப்பட்டது. இது பற்றி ஏற்கனவே கூறப்பட்டு விட்டது. ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் அதைப் பற்றி இவ்வாறு கூறியுள்ளார்கள்: இஸ்லாத்தின் ஆரம்ப காலகட்டத்தில் இரண்டு நபர்கள் மட்டுமே முஸ்லிம்களில் வீரராக கருதப்பட்டு வந்தார்கள். ஒருவர் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், மற்றொருவர் அமீர் ஹம்ஸா ஆவார்கள். இவர்கள் இருவரும் இஸ்லாத்தில் நுழைந்தபோது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம், நமது வீடுகளில் ஒளிந்து கொண்டு அல்லாஹ்வை வணங்குவதா? இதை நாங்கள் விரும்பவில்லை என்று விண்ணப்பம் செய்தார்கள். நமக்கு கஃபாவின் மீது உரிமை உள்ளது. அவ்வாறிருக்க நாம் நமது உரிமையை பெறாமல் இருப்பதற்கும் வெளிப்படையாக அல்லாஹ்வை வணங்காமல் இருப்பதற்கும் எந்த காரணமும் இல்லை என்று கூறினார்கள். எனவே நிராகரிப்பாளர்களை குழப்பம் விளைவிக்கும் குற்றத்திலிருந்து பாதுகாப்பதற்காக வீட்டிலேயே தொழுகையை நிறைவேற்றி வந்த ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கஃபாவில் இறைவணக்கம் செய்வதற்காக சென்றார்கள். அப்போது ஒரு பக்கம் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் வாளை உருவிக் கொண்டு சென்று கொண்டிருந்தார்கள். மற்றொரு பக்கம் அமீர் ஹம்ஸா (ரலி) அவர்கள். இவ்வாறு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்

கஃபாவில் வெளிப்படையாக தொழுகையை நிறைவேற்றினார்கள்.

(குத்பாத்தே மஹ்மூது தொகுதி 23 பக்கம் 10)

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இஸ்லாத்தை ஒப்புக் கொண்ட செய்தி குரைஷியர்களிடம் பரவியபோது அவர்கள் கடும் கோபமுற்றனர். அந்த கோபத்தின் நிலையில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் வீட்டை அவர்கள் முற்றுகையிட்டனர். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் வெளியேறியபோது அன்னாரை சுற்றிலும் மக்களின் ஒரு பெரும் கூட்டம் அங்கு கூடியிருந்தது. சில கோபம் கொண்ட இளைஞர்கள் அன்னாரை தாக்குவதற்கும் ஆயத்தமாக இருந்தார்கள். ஆனால் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மிகவும் தைரியத்துடன் அவர்களுக்கு முன்னால் நின்று கொண்டிருந்தார்கள். இறுதியில் அதே நிலையில் அஃஸம் ஆஸ் பின் வாயில் என்ற மக்காவின் ஒரு தலைவர் அங்கு வந்து விட்டார். அந்த கூட்டத்தைக் கண்டு தலைவர் என்ற ரீதியில் அங்கு கூட்டத்திற்குள் முன்னேறி, இது என்ன விவகாரம்? என்று கேட்டார். அதற்கு உமர் சாபி ஆகிவிட்டார் என்று மக்கள் கூறினர். அந்த சந்தர்ப்பத்தை உணர்ந்தவாறு, சரி! அதற்காக இந்த கலவரத்திற்கு என்ன அவசியம் ஏற்பட்டு விட்டது? என்று அந்த தலைவர் கேட்டார். நான் உமருக்கு பாதுகாப்பு வழங்குகின்றேன் என்றும் கூறினார்.

அரபிகளின் வழிமுறைப்படி அந்த குரலுக்கு முன்னால் மக்களுக்கு மௌனமாக இருக்க நேரிட்டது. பின்னர் மெது மெதுவாக அவர்கள் கலைந்து சென்று விட்டனர். அதன் பிறகு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் சில நாட்கள் வரை அவரது அடைக்கலத்தில் இருந்தார்கள். ஏனென்றால் ஆஸ் பின் வாயில் கொடுத்த அடைக்கலத்தின் காரணமாக அன்னாரிடத்தில் எவரும் சண்டையிடவில்லை. ஆனால் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் தன்மானம் இந்த நிலையை நீண்ட காலம் வரை பொறுத்துக் கொள்ளவில்லை. எனவே தற்போது நீண்ட காலம் கழிந்திருக்கவில்லை. அதற்குள் அன்னார் ஆஸ் பின் வாயில் அவர்களிடம் சென்று, நான் உங்களின் அடைக்கலத்தை விட்டு வெளியேறுகின்றேன் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: அதற்குப் பிறகு மக்காவின் வீதிகளில் சண்டை ஏற்பட்டுக் கொண்டிருந்தது. ஆனால் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஒருபோதும் எவருக்கு முன்னாலும் தனது பார்வையை தாழ்த்தவில்லை.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் M.A அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 159)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: பாருங்கள்! ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு எத்தகைய பெரிய எதிரியாக இருந்தார்கள்! அவ்வாறிருப்பினும் அன்னாரிடத்தில் எப்படி மாறுதல் ஏற்பட்டது! அன்னாரிடத்தில் சீர்திருத்தம் மட்டும் ஏற்படவில்லை. மாறாக, அன்னார் எப்படிப்பட்ட உயர்தரமான ஆன்மீக அந்தஸ்தை அடைந்தார்கள் என்றால் அதை கண்டறிவது கடினமாக ஆனது. அதாவது நிலைமை முற்றிலும் தலைகீழாக மாறியது. இவர்கள் அதே மக்களா? என்பதை கூட அடையாளம் காண முடியாமல் போனது.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இஸ்லாம் மற்றும் முஸ்லிம்களுக்கு எதிராக சுற்றிக் கொண்டிருந்தார்கள். ஆனால் இஸ்லாத்தை ஒப்புக் கொள்ளும் நற்பேறு கிடைத்தவுடன் அன்னாரிடத்தில் ஒரு பெரும் மாறுதல் ஏற்பட்டது. எந்த அளவுக்கென்றால் அன்னார் உலகத்தின் நன்மைக்காக தனது உயிரை மாய்த்துக் கொள்வதற்கு ஆயத்தமாக இருந்தார்கள். மேலும் பகலும் இரவும் இஸ்லாத்திற்கு தொண்டாற்றுவதில் மும்முரமாகி விட்டார்கள்.

(தஃப்ஸீரே கபீர் தொகுதி 7 பக்கம் 45)

இங்கு உயிரை மாய்த்துக் கொள்வது என்ற சொற்கள் மார்க்கத்தின் நன்மைக்காக என்று வந்திருக்க வேண்டும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இஸ்லாத்தை ஒப்புக் கொண்ட சம்பவம் தொடர்பாக எடுத்துரைத்தவாறு இவ்வாறு கூறுகின்றார்கள்:

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களைப் பாருங்கள். எந்த அளவுக்கு நன்மை ஏற்பட்டுள்ளது. ஒரு காலத்தில் அன்னார் ஈமான் கொண்டிருக்கவில்லை. நான்கு ஆண்டுகள் காலதாமதம் ஏற்பட்டது. அதில் என்ன இரகசியம் இருந்தது? என்பதை அல்லாஹ்வே நன்கறிவான். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை கொலை செய்வதற்காக ஒரு இளைஞனை அபுஜஹில் தேடினான். அப்போது மிகவும் தைரியசாலியாகவும், தனது தைரியத்தின் காரணமாக மிகவும் பிரபலமானவராகவும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இருந்தார்கள். மிகவும் கண்ணியம் பெற்றிருந்தார்கள். அவர்கள் தங்களுக்குள் ஆலோசனை செய்து ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை கொலை செய்வது என முடிவெடுத்தார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களும், அபுஜஹிலும் உடன்படிக்கையில் கையெழுத்திட்டிருந்தனர். உமர் கொலை செய்து விட்டு வந்தால் இந்த அளவிற்கு பணம் வழங்கப்படும் என்று தீர்மானிக்கப்பட்டது.

அன்னார் கூறுகின்றார்கள்: அல்லாஹ்வின் வல்லமையை பாருங்கள். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களை ஷஹீதாக்குவதற்காக ஒரு காலத்தில் அந்த உமர் செல்கின்றார். பிற்காலத்தில் அதே உமர் இஸ்லாத்தின் நிலையில் சுயமே ஷஹீதாகி விடுகின்றார். அது எவ்வளவு விநோதமான காலமாக இருந்தது. சுருக்கமாக நான் கொலை செய்கின்றேன் என்று அப்போது ஒப்பந்தம் போடப்பட்டது. இந்த ஒப்பந்தத்திற்குப் பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை தேடியவாறு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இரவு முழுவதும் சுற்றிக் கொண்டிருந்தார்கள். அதாவது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை தேடி இரவுகளில் சுற்றிக் கொண்டிருந்தார்கள். தனியாக கிடைத்து விட்டால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை நான் கொன்று விடுவேன் என்று அன்னார் சுற்றிக் கொண்டிருந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எங்கு தனியாக செல்வார்கள்? என்று மக்களிடம் விசாரித்தார்கள். அதற்கு, பாதி இரவு கழிந்ததும் கானா கஃபாவில் சென்று அன்னார் தொழுகையை நிறைவேற்றுவார்கள் என்று மக்கள் கூறினர்.

இதைக்கேட்ட ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மிகவும் மகிழ்ச்சியடைந்தார்கள். எனவே கானா கஃபாவிற்கு சென்று ஒளிந்து கொண்டார்கள். சிறிது நேரம் கடந்த பிறகு காட்டிலிருந்து لَا اِلٰهَ اِلَّا اللّٰهُ என்ற சப்தம் கேட்டது. மேலும் அது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் குரலாக இருந்தது. அந்த சப்தத்தைக் கேட்டு அன்னார் இங்கு தான் வந்து கொண்டிருக்கின்றார்கள் என்பதை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் புரிந்து கொண்டார்கள். மேலும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் எச்சரிக்கையாக மறைந்து கொண்டார்கள். அன்னார் சஜ்தாவில் செல்லும்போது நான் வாளால் அன்னாரின் அருளுக்குரிய தலையை உடலிலிருந்து துண்டித்து விடுவேன் என்று அன்னார் எண்ணம் கொண்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வந்த உடனேயே தொழத் தொடங்கினார்கள்.

இதன் பிறகு நடந்த சம்பவங்களைப் பற்றி ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களே எடுத்துரைப்பதாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சஜ்தாவில் எந்த அளவிற்கு அழுதழுது துஆ செய்தார்கள் என்றால் எனது உடல் நடுங்கத் தொடங்கியது. மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், سَجَدَ لَكَ رُوْحِيْ وَجَنَانِيْ என்று

கூறினார்கள். அதாவது எனது எஜமானனே! எனது ஆன்மாவும், எனது உள்ளமும் உனக்கு சஜ்தா செய்கின்றன என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: இந்த துஆக்களை கேட்டு விட்டு எனது உள்ளம் நொறுங்கிப் போனது. கடைசியில் உண்மையின் அச்சத்தின் காரணமாக எனது கரத்திலிருந்த வாள் கீழே விழுந்து விட்டது. இந்த நபர் உண்மையாளர். மேலும் நிச்சயமாக இவர் வெற்றி பெறுவார் என்று நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அந்த நிலைமையைப் கண்டு புரிந்து கொண்டேன். ஆனால் மனமோ தீமையின் பக்கம் சாய்கின்ற மனமாக இருக்கின்றது. மீண்டும் மீண்டும் சாய்க்கக்கூடியதாக இருந்தது. அன்னார் தொழுது முடித்த பிறகு அங்கிருந்து வெளியேற தொடங்கினார்கள். அப்போது நானும் பின்தொடரத் தொடங்கினேன். பாதங்களின் ஓசையை வைத்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் புரிந்து கொண்டார்கள். இருள் சூழ்ந்த இரவாக இருந்தது. யார்? என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கேட்டார்கள். உமர் என்று நான் கூறினேன். அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், உமரே! நீர் இரவிலும் என்னை விடுவதில்லை. பகலிலும் என்னை விட்டு வைப்பதில்லை என்று கூறினார்கள். அதற்கு ஹஸ்ரத்! எனக்கு எதிராக துஆ செய்து விடாதீர்கள் என்று நான் வேண்டினேன். அந்த நேரமும், அந்த தருணமும் நான் இஸ்லாத்தை ஒப்புக் கொள்வதற்கான தருமணமாக இருந்தது என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள். எந்த அளவுக்கொன்றால் நான் முஸ்லிமாகி விடுவதற்கு இறைவன் எனக்கு நற்பாக்கியம் வழங்கி விட்டான். (மல்ஃபூஸாத் தொகுதி 2 பக்கம் 180,181)

இது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஓர் அறிவிப்பாகும். மற்றொரு இடத்தில் இதன் விளக்கமாக எடுத்துரைத்தவாறு ஓர் இடைவெளிக்குப் பிறகு அன்னார் கூறுகின்றார்கள். அதுவும் இதே விஷயங்கள் தான். ஆனால் அதில் இறுதியில் ஒன்றிரண்டு சொற்கள் சிறிது வேறுபட்ட கருத்துக்களை எடுத்துரைக்கின்றன.

அன்னார் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அபுஜஹிலுடன் இஸ்லாத்திற்கு முன்னர் சந்தித்து வந்தார்கள். இன்னும் கூறப்போனால் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: ஒரு முறை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தீர்த்துக்கட்டி விட வேண்டும் என்று அபுஜஹில் திட்டம் தீட்டினான். சிறிதளவு தொகையும் பரிசாக நிர்ணயிக்கப்பட்டது. அந்த பணிக்காக ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். எனவே அன்னார் தனது வாளை தீட்டினார்கள். மேலும் சந்தர்ப்பத்தை தேடிக் கொண்டிருந்தார்கள். இறுதியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நடு இரவில் கஃபாவிற்கு சென்று தொழுகின்றார்கள் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு தெரிய வந்தது. எனவே அன்னார் கஃபாவில் சென்று ஒளிந்து கொண்டார்கள். அப்போது காட்டிலிருந்து لا إله إلا الله என்ற சப்தத்தை அன்னார் கேட்டார்கள். அந்த குரல் மிகவும் அருகில் வந்தது. எந்த அளவுக்கென்றால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கஃபாவினுள் நுழைந்து விட்டார்கள். மேலும் அன்னார் தொழுகையை நிறைவேற்றினார்கள்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சஜ்தாவில் எந்த அளவுக்கு மன்றாடினார்கள் என்றால் (அன்னார் மீது) வாளை வீசுவதற்கு எனக்கு தைரியம் வரவில்லை. எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தொழுது முடித்துவிட்டு புறப்பட்டார்கள். அப்போது நானும் அன்னாரை பின்தொடர்ந்து சென்றேன். அன்னார் முன்னால் சென்று கொண்டிருந்தார்கள். நான் அன்னாரை பின்தொடர்ந்து கொண்டு சென்றேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எனது பாதங்களின் ஓசையை கேட்டார்கள். மேலும் யார் அது? என்று கேட்டார்கள். நான் உமர் என்று கூறினேன். அப்போது உமரே! நீ இரவிலும் என்னை விடுவதில்லை. பகலிலும் என்னை விட்டு வைப்பதில்லலை என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இந்த கூற்றிலிருந்து அன்னார் எனக்கு எதிராக துஆ செய்து விடுவார்களோ என்று நான் உணர்ந்தேன். எனவே இனி நான் உங்களுக்கு துன்பம் கொடுக்க மாட்டேன் என்று நான் கூறினேன்.

பொதுவாக அரபிகள் வாக்குறுதிகளை மிகவும் கருத்தில் கொண்டு வந்தனர். எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அதனை நம்பினார்கள். ஆனால் உள்ளபடியே ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்குரிய நேரம் வந்திருந்தது. இந்த விஷயங்கள் முந்தைய விஷயங்களிலிருந்து சிறிது புதிதாக உள்ளன. இவரை இறைவன் வீணாக்க மாட்டான் என்ற எண்ணம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உள்ளத்தில் தோன்றியது.

எனவே இறுதியில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் முஸ்லிமானார்கள். பின்னர் அபுஜஹிலுடனும் ஏனைய எதிரிகளுடனும் இருந்த நட்புகளும் தொடர்புகளும் ஒரு நொடியில் முறிந்து போனது. அந்த இடத்தில் ஒரு புதிய சகோதரத்துவம் நிலைபெற்று விட்டது. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) மற்றும் ஏனைய சஹாபிகள் கிடைத்தனர். அதன் பிறகு முந்தைய அந்த தொடர்புகளைப் பற்றி ஒருபோதும் எண்ணம் கூட அவர்களுக்கு வரவில்லை.

(மல்ஃபூஸாத் தொகுதி 3 பக்கம் 340)

ஓரிடத்தில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இஸ்லாத்தை ஒப்புக் கொண்ட இதே சம்பவத்தை எடுத்துரைத்தவாறு அன்னார் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள். சிறிய அளவில் ஒரு சில சொற்கள் வேறுபட்டதாக இருக்கலாம். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை கொலை செய்வதற்காக ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் சென்ற சம்பவத்தை நீங்கள் கேட்டிருக்கக்கூடும். அபுஜஹில் சமூகத்தில் ஒரு வகையான அறிவிப்பை செய்திருந்தான். எவர் இறைத் தூதரை கொலை செய்வாரோ அவர் ஏராளமான வெகுமதியை பெறுவதற்கு தகுதி படைத்தவராக இருப்பார் என்று அவன் அறிவிப்பு செய்தான். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இஸ்லாத்தை ஒப்புக் கொள்வதற்கு முன்பாக அபுஜஹிலுடன் உடன்படிக்கை செய்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை கொலை செய்வதற்கு அன்னார் தயாராகி விட்டார்கள். அதை செய்வதற்கு உரிய சந்தர்ப்பத்தை தேடிக் கொண்டிருந்தார்கள். பாதி இரவிற்குப் பிறகு கஃபாவிற்கு தொழுகைக்காக செல்கின்றார்கள் என்று விசாரித்தபோது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு தெரிய வந்தது.

அந்த நேரத்தை பொருத்தமானதாக கருதி ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இரவில் கஃபாவிற்குள் சென்று ஒளிந்து கொண்டார்கள். பாதி இரவின் நேரத்தில் காட்டிலிருந்து لا إله إلا الله என்ற சப்தம் வரத்தொடங்கியது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சஜ்தாவில் விழுகின்றபோது நான் அன்னாரை கொலை செய்து விடுவேன் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் எண்ணம் கொண்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வேதனையுடன் மன்றாடத் தொடங்கினார்கள். சஜ்தாவில் எந்த அளவிற்கு இறைவனைப் புகழ்ந்துரைத்தார்கள் என்றால் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் உள்ளம் தடுமாறியது. அவரது அனைத்து

தைரியமும் காணாமல் போனது. கொலை செய்ய வேண்டும் என்று துடித்த கரம் தணிந்து போனது.

இங்கு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் மென்மையைக் குறித்து அன்னார் (அலை) அவர்கள் இவ்வாறு எடுத்துரைக்கின்றார்கள்:

தொழுகையை முடித்து விட்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வீடு திரும்ப முற்பட்டார்கள். அப்போது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களும் அன்னாரை பின் தொடர்ந்தார்கள். பாதத்தின் ஓசையை செவிமடுத்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், யார்? என்று கேட்டார்கள். அது உமர் என தெரிந்த பிறகு, உமரே! நீர் என்னை பின்தொடராமல் இருக்க மாட்டீரா? என்று கேட்டார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தனக்கு எதிராக துஆ செய்யப்பட்டு விடுமோ என்ற அச்சத்தால் ஹஸ்ரத்! நான் தங்களை கொலை செய்ய வேண்டும் என்ற எண்ணத்தை விட்டு விட்டேன். எனக்கு எதிராக துஆ செய்து விடாதீர்கள் என்று கூறினார்கள். எனவே தமக்கு இஸ்லாத்தின் மீது அன்பு ஏற்பட்ட முதல் இரவாக அது இருந்தது என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறி வந்தார்கள். (மல்ஃபூஸாத் தொகுதி 7 பக்கம் 61)

இதைக் கூறுவதற்காக நான் மூன்று பல்வேறு ஆதாரங்களை எடுத்து வைத்துள்ளேன். ஒன்று 1901 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தின் அறிவிப்பாகும். மற்றொன்று 1902 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தின் அறிவிப்பாகும். மற்றொன்று 1904 ஆம் ஆண்டு ஜூன் மாதம் அல்லது 1907 ஆம் ஆண்டின் அறிவிப்பாகும். எவ்வாறிருப்பினும் இந்த மூன்று இடங்களிலும் இரவில் கஃபாவில் தாக்குதலைப் பற்றிய குறிப்பை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் செய்துள்ளார்கள். இதற்குப் பிறகு மனதின் நிர்பந்தத்திற்குள்ளாகி ஒருவேளை பகலிலும் அன்னார் வெளியேறி இருக்கலாம். மேலும் சகோதரி, சகோதரனின் சம்பவம் நடந்திருக்கலாம். அதாவது பொதுவாக எடுத்துரைக்கப்படுகின்ற அந்த சம்பவம் நிகழ்ந்திருக்கலாம்.

எவ்வாறிருப்பினும் அன்னார் மூன்று முறையும் இதையே கூறினார்கள். மேலும் அவ்வாறே நிகழ்ந்தது. ஏனென்றால் நஃப்ஸே அம்மாராவைப் (தீமையின் பக்கம் சாய்க்கும் ஆன்மாவைப்) பற்றியும் அன்னார் குறிப்பிட்டுள்ளார்கள். மீண்டும் கோபம் வந்திருக்கலாம். அப்போது அன்னார் வெளியேறி இருக்கலாம். இரண்டு சம்பவங்களில் இந்த குறிப்பு நிச்சயம் உள்ளது. அது சகோதரியுடன் நடந்த சம்பவமாக இருக்கட்டும். அல்லது மைத்துனரின் சம்பவமாக இருக்கட்டும். அல்லது அபுஜஹில் தூண்டியதன் விளைவாகவும், பரிசு அறிவிக்கப்பட்டதன் அடிப்படையிலும் இரவில் கொலை செய்வதற்கான சம்பவமாக இருக்கட்டும். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இந்த எண்ணம் கொண்டிருந்தார்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: அபுஜஹிலை ஃபிர்அவ்ன் என்று கூறப்பட்டுள்ளது. ஆனால் என்னைப் பொறுத்தவரை அவன் ஃபிர்அவ்னை விடவும் மோசமானவன். ஃபிர்அவ்ன் கூட இறுதியில்,

اٰمَنۡتُ اَنَّہٗ لَاۤ اِلٰہَ اِلَّا الَّذِیۡۤ اٰمَنَتۡ بِہٖ بَنُوۡۤا اِسۡرَآءِیۡلَ – (இஸ்ராயீலின் மக்கள் நம்பிக்கை கொண்டிருக்கின்ற அவனையன்றி வேறெதுவும் வணக்கத்திற்குரியதல்ல என்று நான் நம்பிக்கை கொள்கிறேன். (10:91)) என்று கூறி விட்டான். ஆனால் இவன் கடைசி நேரம் வரை ஈமான் கொள்ளவில்லை. மாறாக, மக்காவில் நடந்த அனைத்து குழப்பங்களையும் அவனே செய்து வந்தான். மிகவும் ஆணவம் கொண்டவனாகவும், சுயநலம் படைத்தவனாகவும், பெருமையையும், கண்ணியத்தையும் விரும்பக்கூடியவனாக இருந்தான். அவனது அசல் பெயரும் கூட உமர் ஆகவே இருந்தது. இந்த இரண்டு உமர்களும் மக்காவில் இருந்தார்கள். ஆனால் இறைவனின் நுட்பமான ஞானம் ஒரு உமரை ஈர்த்துக் கொண்டது. மற்றொருவன் நற்பேறு இழந்தவனாக இருந்தான். அவனது ஆன்மா நரகத்தில் எரிந்து கொண்டிருக்கும். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் பிடிவாதத்தை விட்டு விட்டதன் காரணமாக அரசராகி விட்டார்கள்.

(மல்ஃபூஸாத் தொகுதி 4 பக்கம் 247)

ஹஸ்ரத் இப்னு உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்கள் இஸ்லாத்தை ஒப்புக் கொண்டார்கள். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்,

اَللّٰھُمَّ اَخۡرِجۡ مَا فِیۡ صَدۡرِہٖ مِنۡ غِلٍّ، وَاَبۡدِلۡہُ اِیۡمَانًا என்று துஆ செய்தவாறு அன்னாரின் நெஞ்சத்தில் மூன்று முறை தடவினார்கள்.

பொருள்: அல்லாஹ்வே! இவரது நெஞ்சத்திலுள்ள பகைமையை அகற்றி விடுவாயாக. மேலும் அதனை ஈமானைக் கொண்டு மாற்றி விடுவாயாக. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மூன்று முறை இந்த துஆவை செய்தார்கள்.

(அல் இஸ்திஆப் தொகுதி 3 பக்கம் 237 உமர் பின் கத்தாப் (ரலி) – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வதற்கு முன், முந்தைய வாழ்க்கையில் நாம் பார்த்திருந்ததைப் போன்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் முஸ்லிம்களுக்கு மிகவும் எதிரியாக இருந்தார்கள். ஆனால் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டுவிட்ட பிறகு அன்னார் இஸ்லாத்தை ஒப்புக் கொண்டது முஸ்லிம்களுக்கு வெற்றி மற்றும் கஷ்டங்களிலிருந்து விடுதலைக்கான காரணியாக நிரூபணமானது.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மசூது (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நாங்கள் அதுவரை அதாவது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஈமான் கொள்ளாத வரை அல்லாஹ்வை திறந்த வெளியில் (பொது இடத்தில்) வணங்கவில்லை.

(அல் அஸாபா ஃபீ தமீஸுஸ் சஹாபா தொகுதி 4 பக்கம் 484 உமர் பின் கத்தாப் (ரலி) – 2005 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அப்துர் ரஹ்மான் பின் ஹாரிஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: நான் எந்த இரவில் இஸ்லாத்தை ஒப்புக் கொண்டேனோ அப்போது நான் இவ்வாறு சிந்தித்தேன். மக்காவாசிகளில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீதான பகைமையில் எவர் மிக அதிகமாக முன்னேறியவராக இருப்பாரோ அவரிடத்தில் சென்று, நான் இஸ்லாத்தை ஒப்புக் கொண்டு விட்டேன் என்று அவரிடம் கூற வேண்டும் என்று நான் விரும்பினேன். அந்த நபர் அபுஜஹிலாக இருப்பான் என்று தான் எண்ணியதாக ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: காலை விடிந்ததும் நான் அவனிடத்தில் சென்றேன். அவனது வீட்டுக் கதவை தட்டினேன். அபுஜஹில் என்னிடத்தில் வந்தான். எனது மருமகனே! நல்வரவு. நீ எதற்காக வந்துள்ளாய் என்று கேட்டான்.

**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H.Muhammed Lebbai
(Sec.Taleem, Melapalayam)

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: நான் அவனிடம் இவ்வாறு கூறினேன்: அதாவது அல்லாஹ்வின் மீதும் அவனது தூதரின் மீதும் நான் நம்பிக்கை கொண்டு விட்டேன். அன்னார் கொண்டு வந்ததை நான் உண்மைப்படுத்தி இருக்கின்றேன் என்று உன்னிடம் கூறுவதற்காக நான் வந்துள்ளேன் என்று அன்னார் கூறினார்கள். அதற்கு அவன் என் முன்னால் வீட்டின் கதவை அடைத்துக் கொண்டான். மேலும் அல்லாஹ் உன்னையும், நீ கொண்டு வந்துள்ள விஷயத்தையும் நாசமாக்குவானாக என்று அவன் கூறினான். இவ்வாறு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்.

(சீரத் இப்னு ஹிஷாம் தொகுதி 4 பக்கம் 484 ஸிக்ர் உமர் பின் கத்தாப் (ரலி) – 2005 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இது அபுஜஹிலின் சொற்களாகும். ஹஸ்ரத் இப்னு உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: எனது தந்தை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இஸ்லாத்தை ஒப்புக் கொண்டபோது குரைஷியர்களில் மிகவும் அதிகமாக ஒரு விஷயத்தை பரப்புகின்ற பழக்கம் கொண்ட நபர் யார்? என்று மக்களிடம் கேட்டார்கள். அதற்கு ஜமீல் பின் மஃமர் என்று அவர்கள் கூறினர்.

ஹஸ்ரத் இப்னு உமர் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் காலை விடிந்தவுடன் அவர்களிடத்தில் சென்று விட்டார்கள். நானும் அன்னாரை பின்தொடர்ந்து சென்றேன். மேலும் அன்னார் என்ன செய்கின்றார்கள் என்பதை நான் பார்த்துக் கொண்டிருந்தேன். நான் சிறிய வயதுடையவனாக இருந்தேன். எனினும் நான் பார்ப்பதை புரியக்கூடியவனாக இருந்தேன். எந்த அளவுக்கென்றால் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அந்த நபரை அடைந்தார்கள். அப்போது ஜமீலே! நான் இஸ்லாத்தை ஒப்புக் கொண்டு விட்டேன். முஹம்மத் (ஸல்) அவர்களின் மார்க்கத்தில் நுழைந்து விட்டேன். இது உமக்கு தெரியுமா? என்று கேட்டார்கள்.

ஹஸ்ரத் இப்னு உமர் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: இறைவன் மீது ஆணையாக! ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இந்த விஷயத்தை இரண்டாவது முறை கூட கூறவில்லை. அதாவது மீண்டும் ஒரு முறை கூற வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. அதற்குள் அவன் தனது போர்வையை (தரையில்) இழுத்துக் கொண்டு வீட்டை விட்டு வெளியேறினான். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களும் அவனை பின்தொடர்ந்து சென்றார்கள். நானும் எனது தந்தையை பின்தொடர்ந்து சென்றேன். எந்த அளவுக்கென்றால் அந்த நபர் அதாவது ஜமீல் என்பவன் கஃபாவின் வாசலில் நின்று கொண்டான். உரத்த குரலில் கத்தினான். குரைஷிய கூட்டத்தினரே என்று அழைத்தவாறு கஃபாவின் வாசலில் நின்று கொண்டு இவ்வாறு அறிவிப்பு செய்தான். குரைஷிய கூட்டத்தினரே! அப்போது கஃபாவை சுற்றி தனித்தனியாக சபைகளில் அமர்ந்திருந்த மக்கள் அவனை நோக்கி தனது கவனத்தை திருப்பினர். அப்போது, உமர் பின் கத்தாப் சாபி ஆகி விட்டார் என்று அவன் கூறினான்.

அறிவிப்பாளர் கூறுகின்றார்: ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அவனுக்கு பின்னால் நின்று கொண்டு இவன் பொய் கூறுகின்றான். நான் இஸ்லாத்தை ஒப்புக் கொண்டிருக்கின்றேன். சாபி ஆகவில்லை. மாறாக, நான் இஸ்லாத்தை ஒப்புக் கொண்டிருக்கின்றேன். மேலும் அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறெவனும் இல்லை என்றும், முஹம்மத் (ஸல்) அவர்கள் அவனது அடியாரும், தூதரும் ஆவார்கள் என்றும் நான் சாட்சியம் வழங்கியுள்ளேன் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறிக் கொண்டிருந்தார்கள்.

பின்னர் குரைஷிகள் அன்னாரை முற்றுகையிட்டுக் கொண்டனர். அன்னார் அவர்களுடனும், அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுடனும் தொடர்ந்து சண்டையிட்டுக் கொண்டிருந்தனர். அதாவது அதன் பிறகு சண்டை நிகழ்ந்தது. எந்த அளவுக்கென்றால் சூரியன் தலைக்கு மேல் சென்று விட்டது.

அறிவிப்பாளர் கூறுகின்றார்: ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் சோர்ந்து போய் அமர்ந்து விட்டார்கள். பின்னர் அன்னாரின் தலையின் மீது அவர்கள் நின்று கொண்டார்கள். பின்னர் நீங்கள் என்ன விரும்புகின்றீர்களோ செய்து கொள்ளுங்கள். நான் அல்லாஹ்வின் மீது ஆணையிட்டுக் கூறுகின்றேன். நாங்கள் 300 நபர்கள் ஆகிவிட்டால் நாங்கள் இதனை அதாவது மக்காவை உங்களுக்காக விட்டு விடுவோம். அல்லது நீங்கள் அதனை எங்களுக்காக விட்டு விடுவீர்கள். அதாவது நாங்கள் சுதந்திரத்துடன் எல்லா விஷயங்களையும் செய்வோம் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறிக் கொண்டிருந்தார்கள்.

அறிவிப்பாளர் கூறுகின்றார்: அந்த மக்கள் அந்த நிலையிலேயே நின்றனர். அப்போது குரைஷிகளைச் சார்ந்த ஒரு முதியவர் வந்தார். அவர் யமன் நாட்டு துணியில் புதிய ஆடையும், வேலைப்பாடுகள் செய்யப்பட்ட உடையையும் அணிந்திருந்தார். எந்த அளவுக்கென்றால் அவர் அவர்களுக்கு அருகில் வந்து நின்று கொண்டார். உங்களுக்கு என்ன பிரச்சனை? என்று அவர் கேட்டார். அதற்கு உமர் சாபி ஆகிவிட்டார் என்று அவர்கள் கூறினர். அதனால் என்ன ஆகிவிட்டது? ஒரு நபர் தனக்காக ஒரு விஷயத்தை மேற்கொண்டு விட்டார். அதனால் நீங்கள் என்ன விரும்புகின்றீர்கள்? என்று அவர் கேட்டார். பனூ அதீ பின் கஅப் தமது கோத்திரத்தைச் சார்ந்த ஒரு நபரை இப்படியே உங்களிடம் ஒப்படைத்து விடுவார்கள் என்று நீங்கள் கருதுகின்றீர்களா? இந்த நபரை நீங்கள் விட்டு விடுங்கள் என்றும் கூறினார்.

அறிவிப்பாளர் கூறுகின்றார்: அல்லாஹ்வின் மீது ஆணையாக! பின்னர் அந்த மக்கள் உடனடியாக அங்கிருந்து கலைந்து சென்று விட்டனர்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் மகனாகிய இப்னு உமர் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: நான் எனது தந்தையான ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் கேட்டேன். அப்போது அவர்கள் மதீனாவை நோக்கி ஹிஜ்ரத் செய்திருந்தார்கள். நீண்ட காலம் கழித்து மதீனாவிற்கு ஹிஜ்ரத் செய்ததற்கு பிறகு அன்னாரிடம் கேட்டேன். எனது தந்தையே! நீங்கள் இஸ்லாத்தை ஒப்புக் கொண்ட நாளன்று மக்களை தங்களிடமிருந்து விலக்கிய அந்த நபர் யார்? மக்களோ உங்களுடன் சண்டையிட்டுக் கொண்டிருந்தார்களே? என்று நான்


### திருக்குர்ஆனிலிருந்து...

(செவியேற்பவரே!) இப்ராஹீம் இவ்வாறு கூறிய நேரத்தை (நினைத்துப் பாரும்). என் இறைவா! இந்த (மக்கா) நகரத்தை அமைதிக்குரியதாக்கி வைப்பாயாக. நாங்கள் பொய் தெய்வங்களை வணங்குவதிலிருந்து என்னையும், என் சந்ததிகளையும் காப்பாயாக. (14:36)

A.Basheer Ahmad
(Naib Sec.Maal, Melapalayam)

O.A. NIJAM 99947 57172 V.A. SAIT 99430 30230

O.A.N. DOORS & STEELS



All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Construction Chemicals.

5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
(opp. Karuna Clinic) Tirunelveli - 627 005.

கேட்டேன். அதற்கு எனது அன்பிற்குரிய மகனே! அவர் ஆஸ் பின் வாயில் ஸஹ்மீயாக இருந்தார் என்று கூறினார்கள்.

(சீரத் இப்னு ஹிஷாம் பக்கம் 161, 162 ஸிக்ர் இஸ்லாம் உமர் பின் கத்தாப் – 2009 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

புகாரியில் ஓர் அறிவிப்பு இடம் பெற்றுள்ளது. ஹஸ்ரத் இப்னு உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஒரு நாள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தனது வீட்டில் அச்சத்தில் அமர்ந்திருந்தார்கள். அப்போது அபூஅம்ர் ஆஸ் பின் வாயில் சஹமி என்பவர் வந்தார். அவர் வேலைப்பாடு செய்யப்பட்ட போர்வையையும், பட்டாளானா கீழாடையையும் அணிந்திருந்தார். அவர் பனு சஹம் எனும் கோத்திரத்தைச் சார்ந்தவராக இருந்தார். அறிவீனமான காலத்தில் அவர்கள் எங்களது நண்பர்களாக இருந்தனர். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் நீங்கள் எப்படி இருக்கின்றீர்கள்? என்று ஆஸ் கேட்டார். அதற்கு நான் முஸ்லிமாகி விட்டேன். எனவே என்னை கொன்று விட வேண்டும் என்று உமது சமுதாயம் எண்ணுகின்றது என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள். அதற்கு உம்மை எவரும் நெருங்க முடியாது என்று அவர் கூறினார். ஆஸ் இதைக்கூறியபோது நான் நிம்மதியடைந்தேன். ஆஸ் சென்று விட்டார். மேலும் மக்களை சந்தித்தார். மக்காவின் பள்ளத்தாக்கு அந்த மக்களால் நிறைந்திருந்தது.

அப்போது உங்களது எண்ணம் என்ன? என்று ஆஸ் கேட்டார். நாங்கள் கத்தாபின் இந்த மகனை நோக்கி சென்று கொண்டிருக்கின்றோம். அவர் மார்க்கமற்றவராக ஆகிவிட்டார் என்று கூறினர். அதற்கு நீங்கள் அவரிடத்தில் செல்ல வேண்டாம் என்று கூறினார். இதைக்கேட்ட பிறகு மக்கள் திரும்பி வந்து விட்டனர்.

(சஹீஹுல் புகாரி கிதாபுல் மனாகிப் அல் அன்ஸார் பாப் இஸ்லாம் உமர் பின் கத்தாப் ஹதீஸ் எண் 3864)

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அச்சமடைந்ததாக கிடைக்கும் இந்த அறிவிப்பு சரியானதாக தெரியவில்லை. அது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் இயல்புக்கு எதிரானதாகும். அன்னாரிடமிருந்து கவலையின் தாக்கம் வெளிப்பட்டிருக்கலாம். அதை அறிவிப்பாளர் அச்சம் என புரிந்து கொண்டிருக்கலாம். ஏற்கனவே கூறப்பட்ட அறிவிப்பின் அடிப்படையில் சில காலம் கழித்து ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அந்த அடைக்கலத்திலிருந்து வெளியேறி விட்டார்கள். அதைப்பற்றிய குறிப்பு அடுத்து கூறப்படும்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இஸ்லாத்தை ஒப்புக் கொண்டது பற்றி கிடைக்கும் அறிவிப்புகளின் விளக்கங்களில் ஆஸ் பின் வாயில் சஹ்மியைப் பற்றி குறிப்பிட்டவாறு ஹஸ்ரத் ஜைனுல் ஆபிதீன் வலியுல்லாஹ் ஷாஹ் சாஹிப் அவர்கள் இவ்வாறு எழுதியுள்ளார்கள்:

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இஸ்லாத்தை ஒப்புக் கொள்வதற்கு முன்னர் ஏற்கனவே நம்பிக்கை கொண்டிருந்த சில மக்கள் மீது அன்னார் கடினம் காட்டி வந்தது பற்றி குறிப்பு கிடைக்கின்றது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் முஸ்லிமாகி விட்ட பிறகு அன்னாரும் (எதிரிகளின்) கடினத்திற்கு ஆளானார்கள். ஆஸ் பின் வாயில் சஹ்மி, தான் அடைக்கலம் வழங்குவதாக அறிவிப்பு செய்யவில்லை என்றால் அன்னாரும் தொல்லைகளுக்கு ஆளாகி இருப்பார்கள். ஆஸ் பின் வாயில் பின் ஹாஷிம் பின் ஸயீத் பின் சஹம் என்பவர் ஹிஜ்ரத்திற்கு முன்பாக நிராகரிப்பின் நிலையிலேயே மரணித்து விட்டார். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் பனூ அதீ குடும்பத்தைச் சார்ந்தவராக இருந்தார்கள். பனூ அதீ மற்றும் பனூ சஹம் குடும்பத்தில் ஒருவருக்கொருவர் நண்பராக இருந்தார்கள். இந்த ஒப்பந்தம், நட்பு மற்றும் உதவியின் காரணமாக ஆஸ் பின் வாயில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு உதவி செய்வதை தனது தார்மீக கடமையாக கருதினார்.

(சஹீஹுல் புகாரி கிதாப் மனாகிப் அல் அன்ஸார் பாப் இஸ்லாம் உமர் பின் கத்தாப் தொகுதி 7 பக்கம் 346, 347)

நான் ஏற்கனவே கூறியதுபோன்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஆஸ் பின் வாயில் அவர்களின் அடைக்கலத்தை ஒரு நேரத்தில் மறுத்து விட்டார்கள். எனவே ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் சுயமே இது பற்றி இவ்வாறு கூறுகின்றார்கள்:

ஒரு முஸ்லிம் தாக்கப்படுவதையும், நான் தாக்கப்படாமல் இருப்பதையும் பார்த்துக் கொண்டிருக்க விரும்பவில்லை. எனவே இந்த விஷயம் சரியானதல்ல என்று நான் எண்ணினேன். எந்த அளவுக்கென்றால் மற்ற முஸ்லிம்களுக்கு கிடைக்கும் துன்பம் எனக்கும் கிடைக்கட்டும் என்று நான் எண்ணினேன். அந்த மக்கள் கஃபாவில் ஒன்றுகூடும் வரை நான் விலகியிருந்தேன். நான் எனது மாமா ஆஸ் பின் வாயில் அவர்களிடம் சென்றேன். எனது கூற்றை கேட்கும்படி கூறினேன். நான் என்ன கேட்க வேண்டும்? என்று அவர்கள் என்னிடம் கேட்டார்கள். நான் தங்களின் அடைக்கலத்திலிருந்து வெளியேறுகின்றேன் என்று கூறினேன். அதற்கு எனது மருமகனே! அவ்வாறு செய்யாதீர் என்று அவர் கூறினார். அதற்கு இல்லை அது அப்படித்தான் என்று நான் கூனினேன். அதற்கு உமது விருப்பம்போல் ஆகட்டும் என்று அவர் கூறினார். நான் அடைக்கலத்தை திருப்பி ஒப்படைத்து விட்டேன். அதன் பிறகு நான் துன்புறுத்தப்பட்டேன். என்னை மக்கள் அடித்தனர். எந்த அளவுக்கென்றால் அல்லாஹ் இஸ்லாத்திற்கு கண்ணியத்தை வழங்கி விட்டான் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்.

(அஸதுல் காபா தொகுதி 4 பக்கம் 141 உமர் பின் கத்தாப் – 2003 ஆம் ஆண்டு பைரூதிலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

முஹம்மத் பின் உபைத் அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இஸ்லாத்தை ஒப்புக் கொள்ளும் வரை எங்களால் கஃபத்துல்லாஹ்வில் தொழுகையை நடத்த முடியவில்லை. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இஸ்லாத்தை ஒப்புக் கொண்டபோது அன்னார் நிராகரிப்பாளர்களுடன் சண்டையிட்டார்கள். எந்த அளவுக்கொன்றால் நிராகரிப்பாளர்கள் எங்களை விட்டு விட்டனர். மேலும் நாங்கள் அங்கு தொழத் தொடங்கி விட்டோம்.

(தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 143 உமர் பின் கத்தாப் – 2003 ஆம் ஆண்டு பைரூதிலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்ஊது அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் முஸ்லிமானதிலிருந்து நாங்கள் கண்ணியத்துடன் வாழ்ந்து வந்தோம்.

**திருக்குர்ஆனிலிருந்து...**

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A.Nasir Ahmad (Ameer, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

அவர்கள் இரவு நேரத்தில் குறைவாகவே துயில் கொண்டனர். (54:18)

A.Shamsul Alam (Qaid, Melapalayam)

(சஹீஹுல் புகாரி கிதாப் பஸாயில் அஸ்ஹாபுன் நபி (ஸல்) ஹஸ்ரத் உமர் (ரலி), ஹதீஸ் எண் 3684)

அதன் பிறகும் கஷ்டங்கள் இருந்தன. அது தொடர்ந்து கொண்டிருந்தன. ஆயினும் அதற்கு முன்னர் கொடுக்கப்பட்டு வந்த கஷ்டங்களுடன் ஒப்பிடுகையில் இந்த மக்கள் அதனை கடினமாகவே கருதியிருக்கவில்லை. ஆயினும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கும் கஷ்டங்களை சகிக்க நேரிட்டது என்றே வரலாற்றில் வருகின்றது.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஹஷ்ஷாம் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நாங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் இருந்தோம். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்களின் கரத்தை பிடித்திருந்தார்கள். அப்போது அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! எனது நஃப்ஸை தவிர்த்து மற்ற அனைத்தையும் விட தாங்கள் எனக்கு விருப்பத்திற்குரியவர் ஆவீர்கள் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் கூறினார்கள். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், இல்லை. எவனது கரத்தில் எனது உயிர் உள்ளதோ அவன் மீது ஆணையாக! நான் உங்களது உயிரை விடவும் உங்களுக்கு விருப்பத்திற்குரியவனாக ஆகிவிடாத வரை உங்களது ஈமான் முழுமையடைய முடியாது. அது மிகவும் அவசியமான விஷயமாகும் என்று கூறினார்கள்.

அப்போது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம், அல்லாஹ்வின் மீது ஆணையாக! தற்போது தாங்கள் எனது உயிரை விடவும் மிகவும் நேசத்திற்குரியவர் ஆவீர்கள் என்று கூறினார்கள். ஆம்! தற்போது அப்படித்தான் உமரே; தற்போது அப்படித்தான் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அதாவது இது சரிதான். இதுதான் ஈமானின் நிலையாகும் என்று பொருளாகும்.

(சஹீஹுல் புகாரி கிதாபுல் ஈமான்.... ஹதீஸ் எண் 6632)

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அப்பாஸ் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மதீனாவை நோக்கி ஹிஜ்ரத் செய்தது பற்றி குறிப்பிட்டவாறு இவ்வாறு கூறுகின்றார்கள்:

அலி பின் அபூ தாலிப் அவர்கள் என்னிடம் இவ்வாறு கூறினார்கள்: அதாவது மறைந்து ஹிஜ்ரத் செய்யாத எந்தவொரு நபரையும் ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்களைத் தவிர முஹாஜிரீன்களில் நான் அறியேன். அன்னார் ஹிஜ்ரத்திற்கான எண்ணம் கொண்டபோது அன்னார் வாளை தொங்கவிட்டுக் கொண்டார்கள். தோளில் வில்லை சுமந்து கொண்டார்கள். கைகளில் அம்மை ஏந்திக் கொண்டார்கள். மேலும் ஈட்டியை பிடித்தவாறு கஃபாவை நோக்கி சென்றார்கள். குரைஷிய தலைவர்கள் அங்கு வளாகத்தில் அமர்ந்திருந்தார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் சுய மரியாதையுடன் கஃபாவை ஏழு முறை வலம் வந்தார்கள். பின்னர் அன்னார் மகாமே இப்ராஹீம் எனும் இடத்திற்கு வந்தார்கள். அங்கு மன நிறைவுடன் தொழுதார்கள். பின்னர் ஒவ்வொரு கூட்டத்தினரிடமும், ஒவ்வொரு நபரிடமும் நின்று கொண்டு அவரிடம் இவ்வாறு கூறினார்கள்:

முகங்கள் சீர்குலையட்டுமாக. அல்லாஹ் மூக்குகளை மண்ணாக்குவானாக. (இழிவுபடுத்துவானாக). தனது தாய் தன்னை இழந்து விட வேண்டும் என்றும், தனது பிள்ளை அனாதை ஆகி விட வேண்டும் என்றும் தனது மனைவி விதவை ஆகிவிட வேண்டும் என்றும் எவர் விரும்புகின்றாரோ அவர் இந்த நகரத்திற்கு வெளியே வந்து என்னை சந்திக்கட்டும்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை சில பலவீனமான முஸ்லிம்களை தவிர்த்து வேறெவரும் பின்தொடரவில்லை அன்னார் அவர்களுக்கு உரிய தகவல்களை கொடுத்தார்கள். அவர்களுக்கு வழிகாட்டினார்கள். பின்னர் தனது வழியில் செல்லத் தொடங்கினார்கள் என்று ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்.

(அஸதுல் காபா தொகுதி 3 பக்கம் 648, 649 உமர் பின் கத்தாப் – 2003 ஆம் ஆண்டு பைரூதிலுள்ள தாருல் ஃபிக்ரில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இவ்வாறு வெளிப்படையாக ஹிஜ்ரத் செய்தது தொடர்பாக ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களின் இந்த ஒரேயொரு அறிவிப்பு தான் எடுத்துரைக்கப்படுகிறது. ஆனால் வாழ்க்கை வரலாற்றை எழுதியுள்ள பலர் இதிலிருந்து கருத்து வேறுபாடு கொண்டுள்ளனர். முஹம்மத் ஹுஸைன் ஹேக்கல் என்பவர் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் வாழ்க்கை வரலாற்றை உள்ளடக்கிய புத்தகம் ஒன்றை எழுதியுள்ளார். அவர் இந்த விவாதத்தை அதில் செய்துள்ளார். அதாவது ஹிஜ்ரத் செய்யும்படி கட்டளையிட்டவாறு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், நீங்கள் மௌனமாக ஒளிந்து மறைந்து மக்காவை விட்டு வெளியேற வேண்டும். அப்போதுதான் எதிரிகளுக்கு தகவல் கிடைக்காமல் இருக்கும். அவர்கள் பாதைகளில் தடைகளை ஏற்படுத்த மாட்டார்கள். மேலும் தொல்லைகள் தர மாட்டார்கள் என்று வழிகாட்டியிருந்தார்கள்.

எனவே இவ்வளவு தெளிவான கட்டளை இருக்கும் பொழுது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அதனை எப்படி மீறி இருப்பார்கள். ஆனால் இதனுடன் தப்காத்தே இப்னு சஅத் மற்றும் இப்னு ஹிஷாம் ஆகியவற்றில் இவ்வாறு விளக்கம் எழுதப்பட்டுள்ளது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களும் ஏனைய முஸ்லிம்களைப் போன்று மறைந்தே ஹிஜ்ரத் செய்தார்கள். எவ்வாறிருப்பினும் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களின் இந்த அறிவிப்பை ஏதாவதொரு வகையில் உண்மைப்படுத்த வேண்டும் என்றால் இவ்வாறு கூற முடியும். அதாவது ஒரு தருணத்தில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இந்த அறிவிப்பை எழுந்து நின்று செய்திருக்கலாம். அந்த நேரம் ஹிஜ்ரத்திற்கான நேரமாக இருந்திருக்காது. கஃபாவில் நின்று கொண்டு தலைவர்களுக்கு முன்னால் நான் செல்கின்றேன். என்னை தடுத்துக் கொள்ளுங்கள் என்று அறிவிப்பு செய்திருக்கலாம். ஆனால் ஹிஜ்ரத் செய்யாமல் இருந்திருக்கலாம். ஹிஜ்ரத்திற்கான நேரம் வந்தபோது மௌனமாக ஹிஜ்ரத் செய்திருக்கலாம்.

எவ்வாறிருப்பினும் ஹேக்கல் அவர்களின் இந்த கூற்று முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. நான் கூறியதுபோன்று தப்காத்தே இப்னு சஅத் மற்றும் இப்னு ஹிஷாமில் இவ்வாறே எழுதப்பட்டுள்ளது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களும் ஏனைய முஸ்லிம்களைப் போன்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வழிகாட்டலுக்கேற்ப மௌனமாக ஹிஜ்ரத் செய்திருப்பார்கள் என்றே தெரிய வருகின்றது. ஏனென்றால் மக்காவில் அப்போதிருந்த நிலைமையின் அடிப்படையில் மிக வெளிப்படையாக அவ்வாறு செய்வது சாத்தியமற்றதாக இருந்தது. இன்னும் கூறப்போனால் நாம் பார்க்கின்றோம். மக்கா வெற்றி வரை எவரெல்லாம் ஹிஜ்ரத் செய்தாரோ அவர் மௌனமாக ஹிஜ்ரத் செய்வதிலேயே பாதுகாப்பை உணர்ந்தார். எவ்வாறிருப்பினும் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களின் இந்த அறிவிப்பை சரியானதாக ஏற்றுக் கொண்டாலும் தனிப்பட்ட செயலாக அது இருந்திருக்கும். ஆனால் இது சரியல்ல என்று நமக்கு வெளிப்படையில் சாட்சியங்களிலிருந்து தெரிய வருகின்றது.

(முஹம்மத் ஹுஸைன் ஹேகல் அவர்கள் எழுதிய அல்ஃபாரூக் உமர் என்ற நூல் தொகுதி 1 பக்கம் 53, 54 – 2007 ஆம் ஆண்டு பைரூதிலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் பராஃ பின் ஆஸிப் (ரலி) அறிவிக்கிறார்கள்: முஹாஜிர்களில் முதன் முதலில் பனூ அப்துத்தாரைச் சேர்ந்த ஹஸ்ரத் முஸ்அப் பின் உமைர் (ரலி) அவர்கள் எங்களிடத்தில் வந்தார்கள். பின்னர் கண் பார்வையற்ற ஹஸ்ரத் உம்மே மக்தூம் (ரலி) அவர்கள் வந்தார்கள். அன்னார் பனூ ஃபஹ்ர் கோத்திரத்தைச் சார்ந்தவராக இருந்தார்கள். பின்னர் ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்கள் இருபது நபர்களுடன் சவாரியில் வந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை குறித்து கேட்டபோது அன்னார் எனக்குப் பின்னால் வருகின்றார்கள் என்று கூறினார்கள். அதாவது சிறிது காலம் கழிந்து வருவார்கள். பின்னர் சிறிது காலம் கழித்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வருகை தந்தார்கள். மேலும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களும் அன்னாருடன் வந்தார்கள்.

(அஸதுல் காபா தொகுதி 4 பக்கம் 145 உமர் பின் கத்தாப் – 2003 ஆம் ஆண்டு பைரூதிலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இந்த அறிவிப்பு சரியானதாக இருந்தாலும் கூட பின்னர் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஏதாவதொரு சபையில் ஹிஜ்ரத்தைப் பற்றி கூறியிருக்கலாம். முடிந்தால் என்னை தடுத்துப் பாருங்கள் என்று உணர்ச்சிவசப்பட்டு கூறியிருக்கலாம். ஆனால் அன்னார் ஹிஜ்ரத் செய்யும்போது மௌனமாகவே செய்தார்கள். ஏனென்றால் இந்த அறிவிப்பும் நமக்கு கிடைக்கின்றது. அதாவது அன்னாருடன் 20 நபர்கள் ஹிஜ்ரத் செய்திருந்தனர். எவ்வாறிருப்பினும் அல்லாஹ்வே நன்கறிவான். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மதீனாவை வந்தடைந்து குபா எனும் இடத்தில் ரிஃபா பின் அப்துல் மன்ஸிர் அவர்களின் விருந்தினராக ஆனார்கள்.

(சீரத்துஸ் சஹாபா தொகுதி 1 பக்கம் 93 – 2004 ஆம் ஆண்டு கராச்சியிலுள்ள தாருல் இஷாஅதில் அச்சிடப்பட்டது)

நாம் அறிந்ததுபோன்று குபா எனும் இடம் மதீனாவிலிருந்து 3 மைல் தொலைவில் உள்ளது. அங்கு அன்ஸாரின் சில குடும்பம் வசித்து வந்தது. அவர்களில் ஹஸ்ரத் அம்ர் பின் அவ்ஃப் அவர்களின் குடும்பம் தனித்துவமான குடும்பமாக இருந்தது. அந்த குடும்பத்தின் தலைவராக குல்ஸூம் பின் ஹிதம் அவர்கள் இருந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் குபாவை வந்தடைந்து அவருடைய இல்லத்திலேயே தங்கியிருந்தார்கள்.

(ஃபர்ஹின்ங் பக்கம் 230)

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் சகோதரத்துவ பந்தம் தொடர்பாக பல்வேறு அறிவிப்புகள் கிடைக்கின்றன. ஓர் அறிவிப்பின் அடிப்படையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் உமர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) ஆகியோருக்கிடையில் சகோதரத்துவ பந்தத்தை ஏற்படுத்தியிருந்தார்கள். இரண்டு சந்தர்ப்பங்களில் இந்த சகோதரத்துவம் ஏற்படுத்தப்பட்டிருந்தது. ஒரு முறை மக்காவிலும், மற்றொரு முறை ஹிஜ்ரத்திற்குப் பிறகு மதீனாவிலும் ஏற்படுத்தப்பட்டது. மக்காவில் சகோதரத்துவ பந்தம் நிலைநாட்டப்பட்டபோது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தம்முடன் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களையும், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுடன் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் சகோதரத்துவ பந்தத்தையும் ஏற்படுத்தினார்கள். எவ்வாறிருப்பினும் இரண்டு தனித்தனி சம்பவங்களில் இந்த சகோதரத்துவ பந்தம் ஏற்படுத்தப்பட்டது. மதீனாவில் முஜாஹிர்கள் மற்றும் அன்ஸார் ஆகியோருக்கு மத்தியில் சகோதரத்துவ பந்தத்தை ஏற்படுத்தினார்கள்.

ஓர் அறிவிப்பில் வருகிறது. ஹிஜ்ரத்திற்குப் பிறகு ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) மற்றும் ஹஸ்ரத் உவைம் பின் சாயிதா (ரலி) ஆகியோருக்கிடையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சகோதரத்துவ பந்தத்தை ஏற்படுத்தினார்கள். மற்றொரு அறிவிப்பிற்கேற்ப ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்களுக்கும் ஹஸ்ரத் இத்பான் பின் மாலிக் (ரலி) ஆகியோருக்குமிடையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சகோதரத்துவ பந்தத்தை ஏற்படுத்தினார்கள்.

(தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 206 – 2012 ஆம் ஆண்டு பைரூதிலுள்ள தாருல் ஃபிக்ரில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் அவர்கள் இவ்வாறு எழுதுகின்றார்கள்: அதாவது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் சகோதரத்துவ பந்தம் ஹஸ்ரத் இத்பான் பின் மாலிக் (ரலி) அவர்களுடன் ஏற்படுத்தப்பட்டிருந்தது.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 277)

பாங்கு (கொடுப்பதின்) தொடக்கம் தொடர்பாக ஓர் அறிவிப்பில் இவ்வாறு கிடைக்கின்றது. முஹம்மத் பின் அப்தில்லாஹ் பின் ஸைத் அவர்கள் தனது தந்தையிடமிருந்து இவ்வாறு அறிவிக்கின்றார்கள். நாங்கள் காலைப்பொழுதில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்தோம். நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் ஒரு கனவைப் பற்றி கூறினேன். ஹஸ்ரத் அப்துல்லாஹ் (ரலி) அவர்களின் நற்குறிப்பின்போது இந்த குறிப்பு ஏற்கனவே கூறப்பட்டுள்ளது. இங்கு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களைப் பற்றி வந்துள்ளது. எனவே அதனுடைய சிறிய பகுதியை இங்கும் எடுத்துரைக்கின்றேன். அல்லது வேறொரு அறிவிப்பையும் எடுத்து வைத்து கூறுகின்றேன்.

எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நிச்சயமாக இது உண்மையான கனவு என்று கூறினார்கள். நீங்கள் பிலாலுடன் செல்லுங்கள். ஏனென்றால் அவர் உம்மை காட்டிலும் மிக உரத்த குரல் கொண்டவராகவும், அறிவிப்பு செய்யக்கூடியவராகவும் இருக்கின்றார். உங்களிடம் கூறப்பட்டதை அன்னாரிடம் கூறுங்கள். அவர் அதனை அறிவிக்கட்டும். அதாவது ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஸைது (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் பிலால் அவர்களின் தொழுகைக்கான குரலை கேட்டபோது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் தனது போர்வையை இழுத்துக் கொண்டு வந்தார்கள். மேலும் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! உங்களை உண்மையுடன் அனுப்பிய அந்த இறைவனின் மீது ஆணையாக! இந்த நபர் பாங்கில் கூறிய அதே விஷயத்தை தான் நானும் கனவில் கண்டேன் என்று கூறினார்கள்.

அறிவிப்பாளர் கூறுகின்றார்: எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே உரியன. இந்த விஷயம் மிக உறுதிவாய்ந்தாகும் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(சுனன் திர்மதி கிதாபுஸ் ஸலாத் பாப் மாஜாஅ ஃபீ பத்வுல் அஸான் ஹதீஸ் எண் 189)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இதனை எடுத்துரைத்தவாறு கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்தில் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஸைது என்ற ஒரு சஹாபி இருந்தார். அல்லாஹ் அன்னாருக்கு கனவின் மூலமாக பாங்கை கற்றுக் கொடுத்தான். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்)

அவர்கள் அன்னாரின் அந்தக் கனவை அடிப்படையாகக் கொண்டவாறு முஸ்லிம்களிடத்தில் பாங்கிற்கான நடைமுறையை ஏற்படுத்தினார்கள். பிற்காலத்தில் திருக்குர்ஆன் வஹீயும் இதனை உண்மைப்படுத்தியது.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: எனக்கும் அல்லாஹ் இந்த பாங்கையே கற்றுக் கொடுத்திருந்தான். ஆனால் 20 நாட்கள் வரை நான் மௌனமாக இருந்தேன். வேறொரு நபர் இந்த விஷயத்தை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் கூறியிருப்பார் என்ற எண்ணத்தில் நான் மௌனமாக இருந்தேன். இது ஏற்கனவே கூறப்பட்டு விட்டது. எனவே மீண்டும் கூறுவதற்கு அவசியம் இல்லை என்று கருதி நான் மௌனமாக இருந்தேன். இதைப் பற்றியே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஒரு ஹதீஸும் சுட்டிக் காட்டுகின்றது.

اَلْمُؤْمِنُ يَرٰى اَوْ يُرٰى لَهٗ

பொருள்: நம்பிக்கையாளருக்கு சில முறை நேரடியாக செய்தி தரப்படுகின்றது. சில சமயம் மற்றவர் மூலமாக அவருக்கு செய்தி வழங்கப்படுகின்றது.

எஞ்சியவை இன்ஷா அல்லாஹ் எதிர்காலத்தில் எடுத்துக் கூறப்படும்.

(தஃப்ஸீரே கபீர் தொகுதி 7 பக்கம் 624, 625)

தற்போது சுருக்கமாக நான் இந்த விஷயத்தின் பக்கம் கவனமூட்ட விரும்புகின்றேன். அதாவது இன்று ரமலானின் கடைசி ஜுமுஆ ஆகும். இதனை ரமலானின் கடைசி ஜுமுஆ என்ற ரீதியில் மட்டும் பார்க்க வேண்டாம். மாறாக, இந்த ஜுமுஆ எதிர்காலத்தில் நமக்கு புதிய வழிகளை நிர்ணயிக்கக்கூடிய ஜுமுஆ ஆக இருக்க வேண்டும். ரமலானில் எந்த விஷயங்கள் பற்றி கவனம் ஏற்பட்டதோ மேலும் எந்தெந்த நன்மைகளை செய்வற்கு நற்பாக்கியம் கிடைத்ததோ அதனை ரமலானிற்கு பிறகும் தொடரச் செய்ய முயற்சி செய்ய வேண்டும். இன்னும் கூறப்போனால் அதில் நாம் முன்னேற வேண்டும். நாம் இந்த நன்மைகளையும், தூய மாறுதல்களையும் நிலைநாட்டவில்லை என்றால், அதில் நாம் முன்னேற்றம் காணவில்லையென்றால் ரமலானை கடப்பது நமக்கு பயனற்றதாகும்.

கடந்த ஜுமுஆவில் நான் தருது மற்றும் இஸ்திக்ஃபார் செய்வதன் பக்கம் கவனமூட்டியிருந்தேன். அவை ரமலானுடன் மட்டும் நின்று விடக்கூடாது. ரமலான் கழிந்தது என்று எண்ணி நாம் உலகப் பணிகளில் துஆக்கள் செய்வதையும், இஸ்திக்ஃபார் செய்வதையும் மறந்து மூழ்கி விடக்கூடாது. எப்போதும் இதனை நாம் நினைவிற் கொள்ள வேண்டும் என்று இதன் பக்கமும் நான் குறிப்பாக கவனமூட்டியிருந்தேன். தற்போதைய காலத்தில் தஜ்ஜாலிய தந்திரங்களும், நடைமுறைகளும் புதிய புதிய வழிமுறைகளை பயன்படுத்தி வருகின்றன. உலகத்தின் பளபளப்புகள் பெரும்பான்மை மக்களை தன்னுள் ஈர்த்துக் கொண்டுள்ளது. நமது இளைஞர்களும் பிள்ளைகளும் கூட சில நேரங்களில் அதன் தாக்கத்தின் கீழ் வந்து விடுகின்றனர். அதுபோன்ற நிலையில் அல்லாஹ் நம்மை இந்த ஷய்த்தானிய தாக்குதல்களிலிருந்தும் தஜ்ஜாலின் தாக்குதல்களிலிருந்தும் பாதுகாப்பாக வைக்க வேண்டும் என நமக்காகவும் மிகவும் துஆ செய்வது அவசியமாகும்.

நமது பிள்ளைகளை நம்முடன் அனைத்துக் கொண்டு மேலும் நம்முடன் வைத்துக் கொண்டு அவர்களுடன் ஒரு குறிப்பான தொடர்பை ஏற்படுத்தி அவர்களுக்கு இறைவனது இருப்பை பற்றியும், இஸ்லாத்தின் அழகிய போதனைகளைப் பற்றியும் எடுத்துரைப்பது அவசியமாகும். பின்னர் முழுமையான உறுதியை ஏற்படுத்தி அதாவது குழந்தைகளின் உள்ளங்களில் முழுமையான உறுதியை ஏற்படுத்தி பின்னர் அவர்களை இறைவனுடன் எவ்வாறு ஒன்றிணையச் செய்து விட வேண்டுமென்றால் அவர்களின் எந்தவொரு சிந்தனையும், செயலும், பணியும் இறைவனின் திருப்திக்கு எதிராகவோ, அவனது போதனைகளுக்கு எதிராகவோ அமைந்து விடாத வகையில் இருக்க வேண்டும். ஒவ்வொரு உலகியல் சிந்தனை மற்றும் குழப்பத்தைப் பற்றியும் அவரிடம் பதில் இருக்க வேண்டும். சில விஷயங்களைப் பற்றி அவர்களிடம் பதில் இல்லாமல் போய்விடக்கூடாது. மேலும் அதன் காரணமாக மற்றவர்களின் தாக்கத்தின்கீழ் அவர்கள் வந்து விடக்கூடாது. அந்த பதிலின் காரணமாக அவர்கள் அந்த குழப்பங்களில் பாதுகாத்துக் கொள்ளக்கூடியவர்களாக ஆகிவிட வேண்டும். இதுவே நமது சந்ததிகளின் வாழ்க்கைகளை மேம்படுத்துவதற்கும், அவர்கள் நிலைநிற்பதற்கும் உத்தரவாதமாகும். மேலும் எல்லா வகையான குழப்பங்களிலிருந்தும் நமது சந்ததிகளை பாதுகாப்பதற்கு சரியான வழிமுறை இதுவே ஆகும். ஆனால் நாம் சுயம் ஈமானிலும், உறுதியிலும் நமது உயர்தரமான தரத்தை பெறாத வரை இது ஒருபோதும் நடைபெற முடியாது. ஒரு நம்பிக்கையாளரின் சிறப்பான தரத்தை நாம் அடையாத வரை இந்த விஷயங்கள் நடைபெற முடியாது.

மேலும் நமது தொடர்புகள் இறைவனுடன் உறுதியாக இருக்கும்போது தான் இவை சாத்தியமாகும். நமது தொழுகைகளும், நமது இறைவணக்கங்களும் தரமானதாக இருக்க வேண்டும். நாம் ஏன் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் பைஅத் செய்திருக்கின்றோம் என்று நாம் நமது பொறுப்புகளை புரிந்தவர்களாக இருக்க வேண்டும். நம்மீது சுமத்தப்பட்டுள்ள இந்த பொறுப்பு மாபெரும் பொறுப்பாகும். நமது ஈமானை உறுதிப்படுத்தியவாறு நமது செயல்களை நிரந்தரமாக கண்காணித்தவாறு, நமது சந்ததிகளை பாதுகாப்பதற்குரிய காரணியாக நாம் ஆக வேண்டும். இது மாபெரும் கடமையாகும்.

வெட்கக்கேடு மற்றும் வீணானவற்றின் உச்சத்தை இன்றைய காலகட்டம் தொட்டிருக்கின்றது. இதுபோன்ற நிலை முன்னர் ஒருபோதும் இருந்ததில்லை. ஒவ்வொரு குடும்பத்திலும் TV ன் மூலமாகவும், Internet மூலமாகவும் இவ்விஷங்கள் சென்றடைந்துள்ளன. முந்தைய காலத்தில் வெளியில் செல்வதில் தான் அபாயம் இருந்தது. தற்போது வீட்டினுள்ளேயே அபாயம் உள்ளது. ஒளிந்து மறைந்து அமர்ந்து பிள்ளைகள் பார்க்கின்றனர். அவர்கள் என்ன பார்க்கின்றார்கள்? என்பது தெரிவதில்லை. எனவே மிக அதிகமாக எச்சரிக்கையாக இருப்பது அவசியமாகும்.

சான்றோர்கள் அல்லது ஆரம்ப கால அஹ்மதிகள் அல்லது எந்த அஹ்மதிகள் சுயம் பைஅத் செய்து ஜமாஅத்தில் இணைத்துக் கொண்டுள்ளார்களோ, காலத்தின் இமாமை ஒப்புக் கொண்டுள்ளார்களோ அந்த அஹ்மதிகளின் பிள்ளைகளும் இருக்கின்றனர். தமது ஈமானை பாதுகாப்பதற்காக அவர்கள் எல்லா தியாகத்திற்கும் தயாராக இருக்க வேண்டும். தியாகங்களும் செய்து கொண்டிருந்தார்கள். அத்தகைய அஹ்மதிகள் நினைவிற் கொள்ள வேண்டும். உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்கியவாறு தமது நிலைமைகளின் பக்கம் பார்வையை வைக்க வேண்டும். அப்போது தான் நாம் நம்மையும் பாதுகாத்துக் கொள்ள முடியும். நமது சந்ததிகளையும் பாதுகாக்க முடியும்.

எந்தவொரு குடும்பமும் அது சான்றோர்களின் குடும்பமாக இருந்தாலும் சரி; அல்லது ஒரு சான்றோரின் சந்ததியாக இருப்பவர்களது குடும்பமாக இருந்தாலும் சரி அதன் கௌரவம் நமக்கு ஒருபோதும் இந்த விஷயத்திற்கு உத்தரவாதம் வழங்காது. அதாவது அல்லாஹ் நிச்சயமாக அவர்களுக்கு வழங்கிக் கொண்டே

EDITOR
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
SUB EDITOR
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly BADAR Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2020-2022 Vol. 6 Thursday 10 June 2021 Issue No. 23

MANAGER
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.575/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

இருப்பான் என்றோ, அவர்களிடத்தில் திருப்தி கொண்டிருப்பான் என்பதற்கோ உத்தரவாதம் இல்லை. ஒவ்வொரு நபரின் செயலும் அல்லாஹ்வின் திருப்தியை பெறுவதற்கு அவசியமாகும். தமது செயல்கள் தான் நம்மை பாதுகாக்க முடியும். ஒவருடைய உறவும், ஒவருடைய குடும்பமும் எவரையும் பாதுகாக்க முடியாது. எனவே இதற்காக எப்போதும் துஆ செய்து கொண்டிருக்க வேண்டும். தமது மார்க்க பலவீனங்களின் மீது பார்வை வைத்திருக்க வேண்டும். தமது பிள்ளைகள் மற்றும் சந்ததிகள் உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னேறுவதற்காக துஆ செய்து கொண்டிருக்க வேண்டும். உலக முன்னேற்றங்களுக்கு நாம் அதிகமாக துஆ செய்கின்றோம். மார்க்க முன்னேற்றத்திற்கு அதை விட அதிகமாக துஆ செய்ய வேண்டும்.

அதேபோன்று எவர்கள் சுயம் அஹ்மதிகளாக ஆகி இருக்கின்றார்களோ அவர்களும் தமது சிந்தனைகளையும், தனது செயல்களையும் இந்த மட்டத்தில் வைக்க வேண்டும். அப்போது தான் நாமும் தப்பிக்க முடியும். நமது சந்ததிகளும் தப்பிக்க முடியும். எனவே ரமலானின் இந்த எஞ்சிய நாட்களில் அல்லாஹ் நம்மையும் நமது சந்ததிகளையும், சந்ததிகளின் மார்க்கத்தையும் பாதுகாப்பாக வைப்பதற்கும், நமக்கு ஆன்மீக முன்னேற்றம் கிடைக்கவும் அதிகமாக துஆ செய்ய வேண்டும். ரமலானுக்குப் பிறகும் கூட நமது இறைவணக்கங்களின் தரம் மிகவும் முன்னேறிக் கொண்டே செல்ல வேண்டும். நமக்கு அல்லாஹ்வுடன் உறுதியான தொடர்பு நிலைபெற வேண்டும். தஜ்ஜாலின் தந்திரங்களில் சிக்குவதிலிருந்து நாம் பாதுகாப்பாக இருக்க வேண்டும். வெறும் உலக வசதி வாய்ப்புகள் மட்டுமே நமது எண்ணமாக இருக்கக்கூடாது. மாறாக, எப்போதும் நம்மை அல்லாஹ்விற்கு நன்றி செலுத்தக்கூடியவர்களாகவும், அவனுக்கு முன் குனிபவர்களாகவும், எப்போதும் அவனது முழுமையான அடியாராகவும் ஆக்கக்கூடிய மார்க்க மற்றும் உலக அருட்கொடைகளை அல்லாஹ் நமக்கு வழங்க வேண்டும். அதற்காக துஆ செய்ய வேண்டும்.

இதேபோன்று நான் இந்த விஷயத்தின் பக்கமும் கவனமூட்ட விரும்புகின்றேன். இன்றைய நாட்களில் கொரோனா தொற்று நோய் பரவியுள்ளது. அது முழு உலகையும் தனது கட்டுப்பாட்டில் வைத்துள்ளது. அதிலிருந்து தப்பிப்பதற்கும், அல்லாஹ்வின் கருணையை பெறுவதற்கும் குறிப்பாக அதிகமாக துஆ செய்யுங்கள். அதேபோன்று குறிப்பாக எந்த நாடுகளில் அஹ்மதிய்யத்திற்கு எதிராக எதிர்ப்புகள் அதிகம் இருக்கின்றதோ மேலும் எவர்களின் வாழ்க்கை கஷ்டத்திற்குள்ளாகி உள்ளதோ அவர்களுக்காகவும் அதிகமாக துஆ செய்யுங்கள். அல்லாஹ் அவர்களுக்கு எளிமையை ஏற்படுத்துவானாக.

பாகிஸ்தானிய அஹ்மதிகள் குறிப்பாக தான தர்மங்கள் செய்வதன் பக்கமும், துஆக்களின் பக்கமும் இந்த நாட்களிலும், பின் எதிர்வரும் நாட்களிலும், எப்போதும் மிக அதிகமாக கவனம் செலுத்த வேண்டும். இந்த துஆக்களும், அல்லாஹ்வின் திருப்தியை பெறுவதற்கு செய்யப்படும் இந்த முயற்சிகளும் எதிரிகளின் ஒவ்வொரு முயற்சியையும், ஆயுதத்தையும் செயலிழக்கச் செய்து விடும் இன்ஷா அல்லாஹ்.

رَبِّ كُلُّ شَيْءٍ خَادِمُكَ رَبِّ فَاحْفَظْنِيْ وَانْصُرْنِيْ وَارْحَمْنِيْ

اَللّٰهُمَّ اِنَّا نَجْعَلُكَ فِيْ نُحُوْرِهِمْ وَنَعُوْذُبِكَ مِنْ شُرُوْرِهِمْ

இந்த துஆக்களையும் அதிகமாக செய்ய வேண்டும். ஆனால் இதனையும் நினைவிற் கொள்ளுங்கள். வெறும் நாவளவிலான துஆ பயன் தருவதில்லை. நாங்கள் என்ன துஆ செய்வது? என்று மக்கள் கடிதங்கள் மூலமாக என்னிடம் கேட்கின்றனர். எதுவரை நாம் நமது தொழுகைகளை அழகுபடுத்தி தொழ மாட்டோமோ மேலும் அதற்குரிய உரிமைகளை வழங்குவதில்லையோ அதுவரை வெறும் நாவினால் நாம் செய்யும் துஆக்கள் பயனளிக்காது. ரமலானில் நாம் எந்த அளவுக்கு ஏற்பாட்டை செய்திருந்தோமோ ரமலானுக்குப் பிறகும் அந்த நிலையை தொடரச் செய்ய வேண்டும். அல்லாஹ்வின் கருணை மற்றும் உதவியை நாம் உண்மையான வடிவில் ஈர்க்கக் கூடியவர்களாக ஆகி விட வேண்டும்.

இதேபோன்று எல்லா வகையான குழப்பங்களிலிருந்தும் தப்பிப்பதற்கு அதிகமாக துஆக்கள் செய்ய வேண்டும். நாம் இந்த ரமலானின் எஞ்சியுள்ள நான்கு, ஐந்து நாட்களை வெற்றிகரமாக கடக்கக்கூடியவர்களாக திகழவும், பின்னர் ரமலானிற்குப் இந்த நன்மைகளை தொடரச் கூடியவர்களாக திகழ்வதற்கும் அல்லாஹ் நமக்கு நற்பாக்கியத்தை வழங்குவானாக.

இதையும் நினைவிற் கொள்ளுங்கள். அதாவது நாம் நமது துஆக்களின் வட்டத்தை எந்த அளவுக்கு பரந்துபட்டதாக ஆக்குவோமோ அதே அளவில் அல்லாஹ்வின் அருட்கள் நம்மீது இறங்கும். எனவே குறிப்பாக ஒவ்வொரு அஹ்மதியின் கஷ்டமும் அகல்வதற்காகவும் துஆக்கள் செய்து கொண்டிருக்க வேண்டும். இதன் மூலம் நாம் உணராத வகையில் நமக்குள் அன்பு, சகோதரத்துவம் மற்றும் தொடர்பிற்கான சூழல் உருவாகும். அல்லாஹ்வின் அருட்களிலிருந்து நமக்கு பங்கு நிச்சயம் கிடைக்கும். ஆயினும் அதிகமான அன்பும், நேசமும் உருவாகும் ஒரு செயல் நன்மையும் கிடைக்கும்.

பொதுவாக முஸ்லிம் சமுதாயத்திற்காகவும் துஆ செய்யுங்கள். அவர்கள் காலத்தின் இமாமை நிராகரித்து தமது இம்மையையும், மறுமையையும் சீர்கெடுத்துக் கொள்ளும் வழியில் சென்று கொண்டிருக்கிறார்கள். இதிலிருந்து அல்லாஹ் அவர்களை பாதுகாப்பானாக. மனித குலத்திற்காக ஒட்டு மொத்தத்தில் துஆ செய்யுங்கள். அல்லாஹ் அவர்களையும் சரியான வழியில் வழிநடத்துவானாக. அல்லாஹ்வின் கோபத்திலிருந்து தப்பிப்பதற்கு நற்பேறு வழங்குவானாக.

எவ்வாறிருப்பினும் துஆக்கள் செய்வதும், துஆக்கள் செய்வதும், துஆக்கள் செய்து கொண்டே செல்வதும் நமது பணியாகும். ரமலானிலும் செய்ய வேண்டும். ரமலானிற்குப் பிறகும் செய்ய வேண்டும். அல்லாஹ் அனைவருக்கும் அதற்கான நற்பேறை வழங்குவானாக.

(தமிழில்: மவ்லவி A. அப்துர் ரஹ்மான் தாஹிர்)

.....☆.....☆.....☆.....

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad